


# மனமெனும் கூடு

(கவிதைத் தொகுப்பு)

கந்தர்மடம் அ.அஜந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09765 &8015

# மனமெனும் கூடு

## கவிதைத் தொகுப்பு



ஆக்கம்

கந்தர்மடம் அ.அஜந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தலைப்பு | - | "மனமெனும் கூடு" (கவிதைத் தொகுப்பு) |
| ஆசிரியர் / ஓவியம் | } | கந்தர்மடம் அ.அஜந்தன் |
| பதிப்புரிமை | - | அ. காயத்திரி |
| அட்டைப்பட ஓவியம் | - | இணையம் |
| பக்கவடிவமைப்பு | - | அ. செந்தூரன் |
| முதற் பதிப்பு | - | சித்திரை, 2016 |
| பக்கங்கள் | - | 96 + XI |
| அச்சிடல் | - | மதி கலர்ஸ் |
| விலை | - | 300/= |

| | | |
|---|---|---|
| Title | - | "ManamenumKoodu" (Collection of poem) |
| Author / Art | } | Kandarmadam A.Ajanthan |
| Copy Rights | - | A. Kayathry |
| Cover page | - | Internet |
| Page designing | - | A.Senthooran |
| First edition | - | April, 2016 |
| Pages | - | XI + 96 |
| Printers | - | Mathi Colours |
| Price | - | 300/= |

ISBN 978-955-43107-0-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | |
|---|---|
| அணிந்துரை | i |
| வாழ்த்துரை | iii |
| கண்ணீரின் சிற்பங்களாய்... | v |
| முகவுரை | vii |
| 1. முதுமை | 01 |
| 2. மானிட வாழ்வு | 02 |
| 3. சிறைக்கதவு திறந்திடுமோ | 03 |
| 4. ஊனம் இங்கு ஏ(எ)து | 05 |
| 5. கலைந்திடும் கனவுகள் | 06 |
| 6. நிலையாமை | 07 |
| 7. மனித இயந்திரம் | 08 |
| 8. மனமெனும் கூடு | 09 |
| 9. கள்ளிப் பூ | 10 |
| 10. அகதியின் மீதி | 11 |
| 11. தா(தூ)ய்மை | 12 |
| 12. சுயசிற்பி | 13 |
| 13. மெழுகுவர்த்தி | 14 |
| 14. வீ(வி)தி விபத்து | 15 |
| 15. வாழ்க்கை முரண்கள் | 16 |
| 16. மனிதம் மரித்த இடம் | 18 |
| 17. வறுமையின் நிறம் | 20 |
| 18. புதிரோடு போகும் ஊர்வலம் | 21 |
| 19. தூக்குக் கயிற்றில் ஓர் உயிர் | 23 |
| 20. வினை விதைப்பவன் | 24 |
| 21. விதி | 25 |
| 22. நீயும் தாய்வயிற்றில் உதித்தாயோ! | 26 |
| 23. பாலகனும் பாலைப்பழமும் | 28 |
| 24. அகிம்சையின் தந்தை | 29 |
| 25. மனிதனும் கடவுளும். | 30 |
| 26. முள் விரிக்கும் சிறகு | 30 |
| 27. சமாதானச் சின்னம் | 30 |
| 28. மானிடப் பாவிகள் | 31 |
| 29. நிமிர்ந்து செல் | 32 |
| 30. பசி | 33 |
| 31. பிற உயிரை நேசி | 34 |
| 32. புது மொழிகள் | 35 |
| 33. நீ என்னைப் பிரிந்தால் | 36 |
| 34. சன்மானமாகும் அவமானங்கள் | 37 |
| 35. ஆ(நிரா)சைகள் | 38 |
| 36. உரிமையும் கடமையும் | 39 |
| 37. உயிரோசை | 40 |
| 38. தேடித் தொலைத்த வாழ்வு | 41 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. உரப்பையின் உள்ளக் குமுறல் 42
40. இரட்டை வாழ்வு 43
41. முகவரி தொலைந்த தேசம் 44
42. பகுத்தறிவு 45
43. ஒரு அகதியின் பயணம் 47
44. அடையாளங்கள் 48
45. சட்ட அரங்கேற்றம் 49
46. தீக்குச்சி 49
47. அனாதைப் பிணங்கள் 50
48. வெற்றி என்பது இவற்றில் எ(ஏ)து? 51
49. பெற்றதும் பறிபோனதும் 52
50. பார்வையாளர்களாய்... 54
51. திருவிழாக் கோலம் 55
52. இல்லாவாழ்வு 56
53. பேருந்துப் பயணத்தில் 57
54. தீயிடை விழுந்த விதை 59
55. பாதிவழியில் நீதி காத்திருக்கும் 61
56. இறைபணி எ(ஏ)து? 63
57. மண்ணுக்குள் புதையுண்ட புனிதர்கள் 65
58. என் கேள்விக்கு பதில் 67
59. மாண்டுபோன வாழ்வு 69
60. கோழையின் வீராப்பு 71
61. இனி புதைகுழிகளும் வாய் திறக்கும் 72
62. சிரிக்க மறந்த முகங்கள் 74
63. கற்றுக்கொண்ட பாடம் 75
64. வஞ்சனை 76
65. காலனும் கண்ணீர் விட்டான் 77
66. மனங்களை வெல்லும் மரங்கள் 78
67. வடபுலத்துச் சின்னம் 80
68. மாரியின் அலங்காரம் 81
69. ஆராய்ச்சியின் பிடியில் இயற்கை 82
70. இயற்கையின் மனித குணம் 83
71. வீழ்ச்சியும் எழுச்சியும் 85
72. (க)விதை 86
73. பொறுமை மீறினால் 87
74. சத்தம் கேள் 88
75. சிலிர்ப்பு 90
76. அறுவடை 90
77. ஆணிவேர் 91
78. புயல் 92
79. ஏமாளி 92
80. வாழ்க்கை 92
81. வலிகள் மலிந்தது அறிக்கை நலிந்தது 93
82. கைம்பெண் 95

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

"மனமெனும் கூடு" மௌனங்களைக் கலைக்கும் ஏடுயூ
புஜங்களை நிமிர்த்தி, புலன்களைப் புரட்டிவிடும்
அஜந்தனின் அகராதி இது....யூ
பறிபோன வாழ்வியல், நெறிகெட்ட பண்பியல்
போரின் வெம்மை, பொல்லா வறுமை
புலராத விடியல், தளராத முயற்சி
உளவியல் உணர்ச்சி, உரிமையின் எழுச்சி
திகைப்படையும் இழப்புகள், அகப்படாப் போலிகள்
பசியின் கொடுமை, நசிக்கும் கொடுங்கோல்
நீதிநெறி நேர்மை, நாதியற்றோர் நடப்பியல்
அறிவார்ந்த பண்பியல், வெறிகொண்ட காமுகர்
மேன்மைத் தாய்மை, வாண்மைமிகு முயற்சி
மாண்புறு மனிதமும் மகிழ்வுறும் இயற்கையும்
இத்தனையும் கொண்ட அட்சயபாத்திரம் தான்
அஜந்தனின் இந்த அதிசய பொக்கிசம்யூ

அஜந்தனின் அகராதியில்.........
போரவலப் பேரனர்த்தங்களின்
ஈரம் காயாது இன்னும் இருக்கும்
வன்ம விளைவின்
வலிகளைப் பதிக்கின்றார்.....
பாலுண்ட குழந்தையும், பல்விழுந்த பாட்டியும்
செல்விழுந்து மாண்டகாலம் .....
காலனும் கண்ணீர்விட்ட கவிதையில் கலங்குகின்றார்...
'முயன்று தொடர்ந்தால் முடியாதது ஏதுமில்லை' என
முயற்சியின் வலிமையை முயற்சிக்கமுயற்சிக்க முயல்
சிக்கும் என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது கவிக் கவனங்களில் முடிப்புவரிகளில் தான்
முகவரிகளின் அர்த்தம் முழுமையடைகின்றது.
ஜாதகம் பார்பதன் ஜாதக பாதகங்களை 'விதி' எனும்
கவிமூலம் விதைத்துரைக்கின்றார்.
இதை, 'ஏழை மக்களின் ஏழாம் அறிவு,
முயற்சியுடையோர்க்கு முட்டுக்கட்டை என
மட்டம் தட்டுகிறார்.

துன்பங்களை தூரிகையாக்கி,
வலிமைகளை வண்ணங்களாக்கி,
எண்ணங்களை சின்னங்களாய்,
நாட்டத்துடன் நயந்து கோட்டு ஓவியங்களில்
இவர் காட்டவும் தயங்கவில்லை

சொற்சுவையூடாக
பற்பல களங்களின்
உற்சவ உணர்வினை
அற்புதம் செய்யும்
நற்கவி அஜந்தனின்
விற்பன்ன விளைவிது.....!
கவிதையைப் பாடு
மனமெனும் கூடு
கணமிதைத் தேடு கலைந்திடும் கேடு.

ஆதரவுடன்
மானியூர் ரட்ணேஸ்

க.ரட்ணேஸ்வரன்
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை

கந்தர்மடம் அ.அஜந்தன் அவர்களின் முதலாவது கவிதைத் தொகுப்பான 'மனமெனும் கூடு' எனும் இந்நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். அஜந்தன் அவர்கள் முல்லைத்தீவில் Save the Children நிறுவனத்தின் சிரேஷ்ட செயற்றிட்ட அலுவலராகப் பணியாற்று பவர். தமது நிறுவனத்தின் பணிகளை விளைதிறனுடனும் வினைத்திறனுடனும் நிறைவேற்றும் பொருட்டு, தாம் சேவை யாற்றும் துறைசார்ந்து உளவியல், உளவளத்துணை (Coun selling) போன்றவற்றில் சிறப்புப் பயிற்சிகள் பெற்றவர். இத்துறை சார்ந்து உளவியல், உளவளத்துணை ஆகியவற்றின் அடிப்படை யிலான கட்டுரைகளை சஞ்சிகைகளிலும் பத்திரிகைகளிலும் அண்மைக் காலங்களில் எழுதிவருகிறார். இக்கட்டுரைகளி னூடாக வாசகர்களோடு நேரடியாகப் பேசுவதோடு, வாழ்க்கை யில் அவர்கள் பற்றுக் கொள்ளவும் உத்வேகத்துடன் செயற்பட வும் தூண்டி வருகிறார்.

'மனமெனும் கூடு' எனும் இக்கவிதைத்தொகுப்பு நூலில், கடந்த மூன்று வருடங்களில் பத்திரிகைகளில் அஜந்தன் எழுதிய கவிதைகள் இடம்பெற்றுள்ளன. 'முதுமை' தொடக்கம் 'கைம் பெண்' ஈறாக எண்பத்திரண்டு தலைப்புகளிலான கவிதை கள் எமது சமூகத்தின் வாழ்வியலை, அதன் நலிவுகளை, அண்மைக் காலங்களில் வாழ்வில் சுமந்த வலிகளை எடுத்துக் காட்டு கின்றன. இந்நூலின் பெயரில் அமைந்த 'மனமெனும் கூடு' எனும் தலைப்பிலான கவிதையொன்றும் இந்த நூலில் இடம் பெற்றுள் ளது. ஆனால் எமது வாழ்வின் அவல நிலையினால் எமது 'மனம் எனும் கூடு' கொள்ளும் அலைப்புகளையும் ஏக்கங் களையும் தொகுப்பிலுள்ள கவிதைகள் பலவற்றிலும் அஜந்தன் வெளிப்படுத்தியுள்ளார். மேலும், எமது வாழ்க்கையின் முரண் நிலைகளை தமது கவிதைகளில் எடுத்துக் கூறி, அவற்றின் தீர்வுக்கான எண்ண அலைகளை எம்மிடம் எழுப்பிச் செல் வதிலும் அவர் வல்லவராய் உள்ளார். கவிதைகள் எளிமையான வையாக, அவரின் வாசகர்களை இலகுவாகச் சென்றடையக் கூடியனவாக உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் யாருக்காக எழுதுகிறோம் என்பது ஆக்க இலக்கியத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அஜந்தன் துடிப்பான ஓர் இளைஞராக இருப்பதனாலும் தன்னார்வத்துடன் சமூக சேவைப்பணிகளில் ஈடுபடுவதனாலும் அவர் தனது கவிதைகளுக்கான வாசகர்களைத் தீர்மானித்துள்ளார் என்றே எண்ணத் தோன்றுகின்றது. சமூக சேவைப் பணிகளில் ஈடுபடும் ஒருவர் படைப்பிலக்கியத்துறையில் இணைந்து கொள்வது வரவேற்கக் கூடியது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் முன்பள்ளி வேலைத் திட்டம் ஒன்றில் இவரைச் சந்திக்க நேர்ந்தது. அன்று முதல், பல்வேறு சந்தர்ப்பங்களில் இவருடன் இணைந்து பணியாற்றவும் இவரின் திறமைகளை மதிப்பிடவும் வாய்ப்புக்கிடைத்தது. அஜந்தனின் சமூக சேவைப் பணியோடு, கவிதை, கட்டுரை எழுதும் பணியும் தொடரவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

கலை இலக்கியங்கள் வெவ்வேறு வடிவங்களை எடுக்க வல்லவை, அவற்றுள் கவிதையின் உருவ அமைப்பு எளிமையாகத் தோன்றினும் பலரை இன்று கவிதையாக்கங்களில் ஈடுபடச் செய்துள்ள போதிலும் கவிதையின் அடிகள் ஒவ்வொன்றுமே வீரியம் மிக்கனவாய் அமைதல் வேண்டும். சொல்லாட்சியும் படிவவார்ப்பும் கவிதைக்கு வீரியம் சேர்ப்பன. கவிதையின் கட்டமைப்புக்கு அமைவாக முன் அனுபவ அறிகைத் தொகுதிகளைப் பயன்படுத்தலும் பயிற்சிக்குரியது. அஜந்தன் அவர்கள் பணியாற்றும் துறைசார்ந்து, உலக அனுபவங்களை ஆழ, அகலப் படுத்திக் கொள்வதற்கும் அவரின் அறிகை அமைப்பை (Cognitive Stucture) விரிவுபடுத்திக் கொள்வதற்கும் நல்ல சந்தர்ப்பம் உள்ளது. நல்ல இலக்கியப் பரிச்சயத்தோடு கவிதை தரும் அனுபவ தரிசனத்தைப்பெறும் வாசகன் ஒருவன் தனது வாசக நிலை அனுபவத்தை விரிவுபடுத்திக் கொள்வதோடு, உலகு பற்றிய புரிதலிலும் விழிப்புணர்வு பெறுகிறான். எனவே, அஜந்தன் இவற்றைக் கவனத்திற் கொள்ளும்போது அஜந்தனிடமிருந்து இன்னும் சிறந்த படைப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அந்த நம்பிக்கையை இவரின் முதலாவது கவிதைத் தொகுப்பான 'மனமெனும் கூடு' தருகிறது.

வாழ்த்துக்கள்

கலாநிதி த.கலாமணி
கல்வியியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீரின் சிற்பங்களாய்...

மானுடம் மீது கொண்ட அளவற்ற அன்பு தனியொரு மனித உணர்வுகளின் வெளிப்பாடு படைப்பாளி கந்தர்மடம் திரு.அ.அஜந்தன் அவர்களின் "மனக் கூட்டில்" ஏற்பட்ட தாங்கமுடியாத வலியின் சுமையினை இக் கவிதைவாயிலாக எம்மிடையே மனிதநேயத்தை காப்பாற்ற முடியவில்லையே என்ற வலி.... அந்த மன ஏக்கம் அந்த ஏக்கத்தின் பிரதிபலிப்பை அவரின் பல கவிதைகள் எம் முன்னே பகிர்ந்து நிற்கின்றன.

மேலும் நீண்டு செல்லும் இந்தவலி அவர் நேசித்த மனிதநேயத்தின் வாயிலாக பல மனங்களில் ஆறாத அந்த வலி யின் அடிநாதத்தை அவர்களோடு பல சம்பவங்களில் பகிர்ந்து கொண்ட பொழுது அவரின் இதயத்தின் அடிவேரை ஆட்டி அசைத்திருப்பதை இங்கே அவரின் கவிதைகள் பல கண்ணீரின் சிற்பங்களாய் கலைந்துபோகும் நினைவுகள்... இந்த மண்ணின் மறைக்கமுடியாத பதிவுகளாய் இருப்பது நினைவுகூரத்தக்க தாகும்.

போர்க்காலச் சூழலில் அகப்பட்ட எம் இனத்தின் எத் தனையோ இதயங்கள் போரின் வடுக்களையும் வலிகளையும் சுமந்து சுமந்து ஆறாத வேதனைத்தீயில் நாளும் பொழுதும் வெந்துமாள்வதை இப்படைப்பாளி நேரில் தரிசித்துள்ளார். அவர் கள் இறக்கும் வரை பொய்முகங்களுடன் நடமாடுவதை விதி என்பதா? இல்லை விதியின் பெயரால் எமக்கு திணிக்கப்பட்ட சதி என்பதா? என்ற கவிதைக் கேள்விக்கணைகள் எம்மை சிந்திக்க வைக்கின்றன.

இக்கவிஞன் அழுதழுது அவரெழுத அவரோடு அவர் பேனாவும் சேர்ந்தழுது தன் மனக் கூட்டுப்பாரத்தை இறக்கி வைத்து நிம்மதி பெருமூச்சைவிடும் ஓசை காற்றில் கலந்து நிற்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்மனதின் தேடலுக்குள் அகப்பட்ட செய்தி எல்லாம் வாழ்விடத்தின் தேடலாகி மனம் கனத்தசுமையாய் போரின் வலிகளை சுமந்தவனாய் நடமாடும் இக்கவிஞன் கவிக்குரல் எழுப்பி கொடுமைக்கு கூர்வாள் தேடுகின்றான் சாடியதை வெட்டி சாய்த்திடவே.

பொறுக்கவில்லை எம் மனது கறையான் புற்றுமண் உண்டு பசிதீர்க்கத் துடித்த உறவுதன் மண்ணில் காக்கைக்கும் நரிக்கும் உணவாகிப்போனகதை. "தனிஒருவனுக்கு உண வில்லை எனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்" என்ற அந்த பாரதியின் குரல் மீண்டும் ஒருமுறை எம் செவிகளில் ஒலிக்கத் தவறவில்லை.

இக்கவிஞனின் போர்க்குரல் பல கவிதைகளால் என் "மனக் கூட்டில்" வலம் வந்து என் இதயத்தை கனமாக்கிச் செல்கிறது. கவிதைக்குள் ஓவியம் தான் எழுதி மனதுக்குள் நீண்டொலித்த கவிக்குரலைப் பாராட்டிவாழ்த்துடன் வணக்கம் பலசொல்லி வளம் பெறவென விடைபெறுகிறேன்.

நன்றி

அன்புடன்

முல்லை ரமணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

வாழ்வில் சந்தித்தவற்றில் சிந்தித்தவற்றை சிறுவரிகளுக்குள் அடக்க நினைக்கின்றேன். நம்மைப் பாதிக்கும் சந்தர்ப்பங்களை வெறும் சம்பவங்களாகப் பார்க்காமல் யதார்த்த வாழ்வியலோடும், தேடலுடனும், உணர்வுபூர்வமாகவும், இயற்கையோடு ஒத்துணர்ந்தும், பொருத்தப்பாடான கற்பனை எண்ணங்களுடனும் சில வரிகளினூடாக ஆராய்ந்து எழுதும்பொழுது அது கவிநயம் பெறுகின்றது.

நமக்குத் துன்பமும், சவாலும் வரும்பொழுதுதான் வாழ்வின் தேடலும், புரிந்துணர்வும் ஏற்படுகின்றது. அதனால் தான் சுகமாக இருக்கும் காலங்களைவிட சுமையாகக் கனக்கும் காலங்கள் எமது சிந்தனைச் சிறகுகளை விரிக்கவைக்கின்றன, மனக்கதவை உடைத்து உள்நுழைகிறது. என் மனக்கூட்டில் தேங்கிக் கிடந்த விடைகாண முடியாத கேள்விகளும், வேதனைகளும், ஏமாற்றங்களும் வஞ்சனைகளும், நம்பிக்கைத்து ரோகங்களும் கடந்து வந்த வாழ்வின் அனுபவங்களாய் இங்கு பகிரப்படுகின்றன.

மனதைக் காயப்படுத்திய சம்பவங்களையும், வலிமிகுந்த நாட்களையும் அவ்வப்போது வரிகளாக்கி நாளிதழ்கள், சஞ்சிகைகளின் ஊடாக பகிர்ந்துகொண்டேன். அவற்றுக்கு உருவம் கொடுக்க சிறுவயதில் ஓவியர் மார்க்கிடம் சில மாதங்கள் பயின்ற ஓவியத்தையும் மிகநீண்ட நாட்களின்பின் இந்த நூல் வாயிலாக உணர்வூட்டி கோடிட்டுவரைய முற்பட்டுள்ளேன்.

எனது பணியின் நிமித்தம் போரின் வடுக்களோடும், சிரிக்க மறந்த முகங்களோடும் வாழும் மக்களை முகாமிலும் பின்பு போரின் அடையாளங்களாய் முல்லைத்தீவிலும் தரிசிக்க நேர்ந்தது. அவர்கள் சந்தித்த இழப்புக்களும், போரின் வலியும், வலிசுமந்த பயணங்களும், துரோகங்களும், புறக்கணிப்புக்களும், பாரபட்சங்களும் அவர்கள் மனதில் பெரும்சுமையாய் கனத்திருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. அவர்களின் வலிகளுடன் கூடிய துக்கம் எல்லா எல்லை களையும் தாண்டி எங்களுடன் பகிர்ந்துகொள்ள வைத்தது. ஓவ்வொருவரது பகிர்வும் கூர்வாளாய் குருதி தெறிக்க என் இதயத்தைக் குடைந்து சென்றது.

அகதியின் மீதியாய் சகோதரர்களைப் பறிகொடுத்துப் பின் பசிக் கொடுமையில் கறையான் புற்றுமண் உண்டு இறந்த தந்தையையும், தன்முன்னே உயிர்துறந்த தாயின் தவிப்பையும் நெஞ்சில் சுமந்து, கையில் பந்தோடு விளையாடும் சிறுவனைத் தோழமையோடு தோள்பற்றிச் சிலநிமிடம் உறவாடியபோது, அவனின் பரம்பரையின் மிகுதி அவன் மட்டுமே என்பதை உணர்ந்த தருணம் பூமி காலடியில் நழுவியது. அந்தச் சிறுவன் மட்டுமல்ல பல பிணங்களும் அனாதைப் பிணங்களாய் அன்று ஈழத்தின் குருஷேத்திரம் முள்ளிவாய்க்காலில் தாமே அடக்க மானவை தான். குருதிசொட்ட மடிந்த தாயின் மடிதேடிப் பாலகன் அறி வானோ? அந்தத் தா(தூ)ய்மை அடங்கிவிட்ட தென்றுயூ மனிதம் மரித்த இடம் அதுவென்பதை உலகம் உணர்ந்து கொண்டது.

அவர்கள் பட்ட துன்பத்தை யாராலும் முழுமையாகச் சொல்லிவிடமுடியாது மாறாக அவற்றை உணரமட்டுமே முடியும். அப்படி உணர்ந்த சில வலிகளையும் வரிகளாக்கினேன். இது அவர்களின் வலிகளை விற்கும் இடமில்லை. கனத்த அந்தக் காலத்தை மறக்கலாம் பட்டதுயரத்தையும் கற்றுக்கொண்ட பாடங் கள் எவை என்பதையும் மறக்க முடிவதில்லை. கவிதையாய் எழுதிவைத்துக்கொண்டேன்.

வெடிவிபத்தில் சிக்குண்டு சகஊழியர்கள் இருவர் நம் கண்முன்னே தம் கண்களை மூட, காயங்களுடன் நானும் சாரதி யும் சாட்சிகளாய் நடுவீதியில் குருதிசொட்டத் தவித்த தவிப்பும் பின்பொருநாள் சாரதி உயிர்துறந்ததும் நிலையாமை வாழ்வைத் தெளிவுபடுத்தியது. அவர்களோடு இருந்த இறுதிநிமிடம் அது விதி என்று ஆறுதல் கூறிவிட முடியாதது. கண்ணீர்க் காவியமாய் என் மனக்கூட்டில் சிறைபட்டுக்கிடக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயங்கள் மறுக்கப்பட்ட தேசத்தில் குற்றங்களுக்குக் குறைவின்றி யுத்தத்தின் பின்பு மீதமிருந்த உயிர்களையும், கலாசாரத்தையும் சீரழிக்கும் கட்டவிழ்த்துவிடப்பட்ட சூழ்நிலை இருப்பதை புங்குடுதீவில் பள்ளிச் சீருடையணிந்த சிறுமி சீரழிக் கப்பட்ட சம்பவம் உணர்த்தியது. அந்த மிருகத்தனமான மனிதர் களை "நீயும் தாய் வயிற்றில் உதித்தாயோ?" என்று பத்திரிகை யூடாக வெறுப்பை வெளிப்படுத்தினேன். வீணான உயிர்ப்பலியும், தற்கொலையும் நிறைந்த தேசத்தில் ஒரு உணர்விழந்த சராசரி மனிதர்களாகவும் பார்வையாளர்களாகவும் வாழப்பழகிவிட்டோம். அதனாலோ ஏனோ தம் நீதிக்காய் இனி புதைகுழிகளும் வாய் திறக்கும் என்ற நிலையில் பாதி வழியில் நீதி காத்திருக்கும் என்ற நம்பிக்கையில் புதிரோடுபோகும் ஊர்வலத்தில் நாமும் ஊமைகளாய் நடந்துசெல்கின்றோம்.

மீள்குடியேற்றம் இடம்பெற்ற வலிவடக்கில் நீண்ட நாட் களின் பின் காலடிபதித்தோம். அது வலி மிகுந்த வடக்குத் தான். இடியுண்ட கட்டடங்களோடு தமிழினம் வாழ்ந்ததற்கு தடைய மில்லாத பிரதேசமாய் காட்சியளித்தது. மாண்டுபோன வாழ்வு மீண்டிடுமா? என்ற கேள்வியை அந்தப் பயணம் தோற்றுவித்தது. பத்திரிகையில் அதை பதிவுசெய்தேன். அழகுமலைமுகடும், தேயிலைத் தோட்டமும், நீர் வீழ்ச்சியும் நிறைந்த மலைய கத்தை மகிழ்வுடன் பலமுறை தரிசனம் செய்தேன். நாம் சிரிக்கையில் எம்மோடு சிரித்து நாம் அழுகையில் எமக்காகவே அழுத அந்த மலையடிவாரத்தின் சோகம் புதைந்த மக்களின் வாழ்வும் நாமறிவோம். அடிமைகளாய், கூலிகளாய் வாழ்நாட் களைத் தொலைத்தவர்களை இயற்கையும் சீற்றத்தால் சீண்டிப் பார்த்தது. மண்சரிவில் மண்ணுக்குள் புதையுண்ட புனிதர்களை அடி மனதிலிருந்து நினைவுபடுத்தியுள்ளேன்.

இப்படியாக துன்பங்களாலும் கோபங்களாலும் ஆக்கிர மிக்கப்படும் பொழுது அதனை ஆரோக்கியமான வழியில் கவிதைவாயிலாகவே என்னால் வெளிப்படுத்த முடிகிறது. நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாக்கவேண்டிய பொக்கிசங்களாக சிறுவர்களும், முதியவர் களும் பார்க்கப்படவேண்டும். ஆனால் கைதடியில் வயோதிபர் இல்லத்தின் பக்கம் பார்வை செல்கையில் அங்கு வெறுமை யோடு பார்த்திருக்கும் முதுமை எமது மூத்த முதுசங்கள் உறவிழந்து தவிப்பது மனதை அடிக்கடி காயப்படுத்தியே சென்றது. தம் பிள்ளைகளுக்காகத் தேடித் தொலைத்த வாழ்வு இதுதானோ? என்று சிந்திக்க வைத்தது. மறுபுறத்தில் பெற் றோராலும், சமூகத்தினராலும் புறக்கணிக்கப்படும் மாற்றுவலு வுள்ள பிள்ளைகளோடு பழகியகாலத்தில் ஊனம் இங்கு ஏ(எ)து? என்பதை அவர்களின் சிந்தனையும், செயலும் நம்மிடமுள்ள குறைநிறைகளை ஆராய்ந்து எழுதவைத்தது.

பிற உயிரை நேசி என்றியம்பும் எம்மதமும் சம்மதம் என் றெண்ணும் எனக்கு, குடும்பத்தவர்களோடும், நண்பர்களோடும் மனக்கசப்பு ஏற்படுவது இறைபணி எ(ஏ)து? என்பதில் தான். என் மதத்தில் நிகழும் ஆகம விதிமுறைகளுக்கு முரணானவற்றிலும், இறைவன் தூணிலும் இருப்பார் துரும்பிலுமிருப்பார் என்று நம்பு வோர் முழத்திற்கொரு ஆலயமமைத்து இறைவனை சிறைவைப் பதிலும், மூடநம்பிக்கைகளிலும் எனக்கு உடன்பாடில்லை. விவே கானந்தர் கூறியதுபோல் "நாணயமற்ற ஆத்திகனைவிட நாணய முள்ள நாத்திகன் எவ்வளவோமேல்" என்ற கூற்றை ஆதரிப் பவனாகவும் இங்கு சிலவற்றை பதிவுசெய்துள்ளேன்.

மனங்களை வெல்லும் மரங்கள் நிழல்களை மட்டுமல்ல வாழ்வின் நிஜங்களையும் தரவல்லவை. மனம் அமைதியடைய இயற்கையின் மனித குணம் ஒரு சிறந்த வழி என்று அனுபவரீதி யாக நானுணர்ந்தேன். தனிமையையும் வெறுமையையும் போக் கும் இயற்கை நமக்கு ஒரு இலவச மருத்துவம் என்பதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இவ்வாறான பல சம்பவங்களும் அனுபவங்களுமே என்னை எழுதத் தூண்டின. அவற்றின் வெளிப்பாடாக என் 'மனமெனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடு' சுமந்த கனத்த நினைவுகளை இந்த நூல்வடிவில் மிக இலகு மொழிநடையில் உங்கள் கரங்களில் இறக்கி வைக்கின் றேன்.

இந்நூலிற்கு வாழ்த்துரை எழுதிய கலாநிதி.த.கலாமணி (சிரேஸ்ட விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்) அணிந்துரை வழங்கிய மானியூர் ரட்னேஸ்/ திரு.க.ரட்னேஸ்வரன் (விரிவுரை யாளர், தேசியகல்வியியற்க் கல்லூரி), எழுத்துத் துறையில் கால்பதிக்க ஆர்வமூட்டிய எழுத்தாளர் திரு.யோசப்பாலா, போர் நடுவே வலிகளோடு எழுதுகோல் சுமந்த எழுத்தாளர் முல்லை ரமணன், ஆலோசனை வழங்கிய திரு.கு.ரஜீபன் (கலாசார உத்தியோகத்தர்), திரு.சி.சிவகரன் (ஆசிரியர்) ஆகியோர்க்கு எனது நன்றிகள். எனது எழுத்திற்கு உறுதுணையாய் இருந்த குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எனது கவிதை, கட்டுரை, சிறுகதைகளை பிரசுரித்துக் களமமைத்துத்தந்த வலம்புரி, உதயன், சுடர் ஒளி, தினக்குரல், நமது முரசொலி, "நான்" உளவியல் சஞ்சிகை மற்றும் "தமிழ் முற்றம்" சஞ்சிகைக்கும் இந்நூலின் வாயிலாக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

அன்புடன்
அரியராசா அஜந்தன்
சண்முகம் வீதி
சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதுமை




தாண்டுபோன கண்கள் இரண்டும்
கலைந்துபோன கனவுகள் சொல்லும்
குழி விழுந்த கன்னங்கள் இரண்டும்
அனுபவத்தின் ஆழம் சொல்லும்
நுரையலையாய் நரைத்த முடி
தலைமுறையின் தகவல் சொல்லும்
கூன் விழுந்து வளைந்த தேகம்
தான் சுமந்த சுமைகள் சொல்லும்
தடுமாறும் பாதம் இரண்டும்
தடம்பதித்த பாதை சொல்லும்
வரிவிழுந்த தோள்கள் இரண்டும்
வலிமிகுந்த வாழ்வைச் சொல்லும்
அவர் போட்ட அத்திவாரம்
மாடிவீடாய் மாறிநிற்கும்
அவர் வளர்த்த மரநிழலில்
ஆடுமாடு கட்டிநிற்கும்
அவர்மட்டும் முதியோர் இல்லத்தில்
முகவரி தொலைத்தவராய்....

(வலம்புரி - 21 . 07 . 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிட வாழ்வு




கனவுகள் சுமந்திட்ட வாழ்வு
இதில் பலித்திட்ட கனவுகள்
எத்தனை கூறு
பயணங்கள் நிறைந்திட்ட வாழ்வு
இதில் இலக்கை அடைந்தவை
எத்தனை கூறு
வெற்றிகள் குவிந்திட்ட வாழ்வு
இதில் உனக்கே உரியவை
எத்தனை கூறு
உறவுகள் சூழ்ந்திட்ட வாழ்வு
இதில் உனக்கென வாழ்பவர்
எத்தனை கூறு
உணர்வுகள் பிணைந்திட்ட வாழ்வு
இதில் உறைந்திட்ட உணர்வுகள்
எத்தனை கூறு
மானிடனாய் பிறந்திட்ட வாழ்வு
இதில் நீ சந்தித்த மனிதர்கள்
எத்தனை கூறு
ஒற்றைப் பூமியில் வாழ்ந்திட்ட வாழ்வு
இதில் மதம் மொழி இனம் ஜாதி
எத்தனை கூறு

(வலம்புரி - 30 . 12 . 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறைக்கதவு திறந்திடுமோ



போர் முடிந்து நாளாச்சு
போனவுயிர் போயாச்சு
ஓடிய குருதியாறும்
வடிந்தெங்கோ போயாச்சு
ஆட்சியும் மாறியாச்சு
ஆயினும் அங்கே
அடைபட்டுக் கிடக்கும்
அரசியல் கைதியின்
விலங்கின்னும் விலகலையே!

கொல்ல வந்தவரை
கைகொடுத்து வழியனுப்பி வைத்தவரே
நன்றியோடு நாம் நினைப்போம்
அந்த நல்ல நாளதனை
கொஞ்சநேரம் சிந்தியுங்கள்
வடக்கில் பொழிந்த எங்கள்
கண்ணீர் மழைகளில் நன்னீரும்
உவர்நீராய்ப் போனதிங்கே
அவை நாளை உப்பளத்தில்
விளையும் உப்பாக

காணாமற் போனோரும்
அங்கு கண்டோம் இங்கு கண்டோம்
என்று வந்து சொன்னபின்பும்
கண்டுகொள்ள வழியின்றி
தவிக்கும் தாயுள்ளம்
புரிந்திருக்கும் உங்களுக்கு

உயிரிருந்தும் ஊனமாய்
உறவிருந்தும் தூரமாய்
உணவிருந்தும் பட்டினியாய்
உடையிருந்தும் அம்மணமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடமையிருந்தும் ஏழையாய்
உரிமையிருந்தும் அடிமையாய்
அவர்கள் படும் பாடறிவீர்

தவழ்ந்து திரிகையில்
பிடிபட்டார் தந்தை
இன்று பள்ளிபயின்றும் வந்தாச்சு
தந்தைமார்பில் துயில்கொள்ள
முடியலையேயூ

காற்சட்டையோடு அன்று
கடைத்தெருவுக்கு போனமகன்
காலாண்டு போனபின்பும்
கட்டித்தழுவ முடியலையே!

மணம்முடித்த சிலநாளில்
சிலர்வந்து அழைத்துச் சென்று
வருடங்கள் கடந்தாச்சு
தலைமுடியும் நரைத்தாச்சு
தோளில் சாய்ந்து அழுதிட
அவரையின்னும் காணலையே!

ஆறுகடல் குளங்கள்கூட
கோடையில் வற்றிவிடும்
பாதியுகம் கடந்தபின்னும்
இவர்கள் கண்ணீர் இன்னும்
வற்றலையே!

இவர்களுக்காய் உயிர்மாய்த்த
தம்பியவன் தியாகம் உங்கள்
உள்ளத்தினைத் திறந்திடுமோ!
சிறைக்கதவு திறந்திடுமோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊனம் இங்கு ஏ[எ]து ?



பாதங்கள் இல்லாதோர்
பாதை தவறிப் போனதில்லை
கண்பார்வை இல்லாதோர்
கண்ணியம் தவறிப் போனதில்லை
வாய்பேச முடியாதோர்
வாய்மை தவறிப் போனதில்லை
கரங்கள் இல்லாதோர்
கறைபடிந்து போனதில்லை
செவிப்புலன் அற்றோர்
செயலிழந்து போனதில்லை
உளவளம் குன்றியோர்
உண்மையை மறைத்ததில்லை
ஊனமாய் பிறந்த யாரும்
ஊதாரி ஆனதில்லை
எல்லாம் இருந்தும் இங்கே
மனிதனாய் வாழ்ந்தவர் யார்?

(உதயன் - 07 . 10 . 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலைந்திடும் கனவுகள்



எனக்குமட்டுமே என்ற கனவுகள்
இரவலாகிப் போயின
நான் பதித்த பாதச் சுவடுகளில்
என்னை மிதித்தபடி
இன்னோர் பாதச்சுவடு
சிறுகச்சிறுக சேர்த்துவைத்த கனவுகள்
சிதறுண்ட சில்லறையாய்
பரந்துகிடக்கிறது அடிமனதில்
ஆலயத்து உண்டியல்போல்
மாற்றார் கனவுகளால் நிறைந்து
கிடக்கிறது என் மனம்
இரும்புப் பூட்டின் பாதுகாப்பில்
சுகமாக சுமந்த கனவுகள்
இன்று சுமையாகிக் கனக்கிறது
கலைந்திடும் கனவுகளில்
இன்னும் குலையாமல் கிடப்பது
நினைவுகள் மட்டுமே.

(வலம்புரி - 15 . 06 . 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலையாமை

நிலையாமை வாழ்வுதனில்
நிலையாகி நிற்பதேது?
கண்ணுக்கு எட்டியவரை
எனது நிலமென்றாய்
கொட்டிக் கிடப்பதெல்லாம்
கட்டியெடுத்து எனதென்றாய்
விட்டுப்போனதெல்லாம்
பரம்பரைச் சொத்தென்றாய்
வேப்பமரம் மட்டுமல்ல
அதன் நிழலும் எனதென்றாய்
மண்ணில் விளைந்ததையும்
மடியில் கட்டிவைத்தாய்
விண்ணில் பறந்ததையும்
கூட்டில் அடைத்து வைத்தாய்
பத்திரங்கள் பத்திரமாய்
பெட்டியிலே பூட்டி வைத்தாய்
உடலோடு ஒட்டியுள்ள உயிரை
எங்கே பூட்டிவைத்தாய் ?
அடுக்குமாடி கட்டினாலும்
ஆறடிப் பெட்டியே உன் கூடு
வகைவகையாய் உணவுண்டும்
வாய்க்கரிசி உனக்குண்டு
கட்டுக்கட்டாய் பணமிருந்தும்
சில்லறைதான் கூடவரும்
கட்டிப்புரண்டு அடிபட்டு
கதியால் நட்ட உறவு
கட்டியழும்போது கேட்கிறதா?
உன் செவியில்
நிலையில்லா உயிரைக்கொண்டு
நிலையாக வாழ்வதேது?



(சுடர்ஒளி - 24 - 30 . 07 . 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித இயந்திரம்

உலகில் மனிதனுக்கு அவசரம்
அவன் பணத்தைச் சேர்க்கவே
தினம் பறந்து திரிகிறான்
பணத்தை நம்பியே தினம்
குணத்தை இழக்கிறான்
அவன் ஓடும் வீதியில்
பலர் விழுந்து கிடக்கின்றனர்
யார் விழுந்தபோதிலும்
எவரும் தூக்கவே இல்லை
தனது கடமையே தன்
தலைக்கு மேலேயாம்
இங்கு தினமும் நடப்பது
ஓட்டப் பந்தயம்
இதில் வென்றவர் யார்?
தோற்றவர் யார்?
நீ வென்ற பின்பு
திரும்பிப் பார்க்கையில்
எத்தனையோ கனவுகள்
மிதிபட்டுக் கிடக்கும்
உன் சந்தோஷம் அனைத்தும்
சருகாகிக் கிடக்கும்
தலை முடியின் நரைமுடிகள்
உன்னை ஏளனம் செய்யும்
பொருள் தேடி தினம்
அலைவதை நிறுத்து
வாழ்வின் பொருள்தனைத்
தேடிப் புறப்படு புது வழியில்.




(சுடர்ஒளி - 21 - 27 . 05 . 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனமெனும் கூடு



கனவுகள் சுமந்திடும் கூடு
அதில் பலித்திடப்போவது
எதுவெனத் தேடு

கவலைகள் வளர்ந்திடும் காடு
இதை வளர்த்திட நினைத்திடின்
வந்திடும் நெருக்கீடு

அன்பினால் தொகுத்திட்ட ஏடு
பிரிவுகள் வருகையில்
உடைந்திடும் ஓடு

இன்பத்தில் மூழ்கிடும் வீடு
இதில் வன்மத்தீ மூட்டினால்
வீடே சுடுகாடு

ஆசைகள் குவிந்திடும் மேடு
பேராசை பெருகிடின்
வாழ்வு தெருவோடு

உள் மனதோடு நீ உறவாடு
அது உணர்த்திடும் நல் வாழ்வு
அதை நம்பி நடைபோடு

நல்லதையே என்றும் நாடு
தீயதை விட்டு ஓடு
உன்னையே போற்றிடும் நாடு

(வலம்புரி - 27 . 04 . 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள்ளிப் பூ . . .



அம்மா செவ்வந்திப் பூ பறித்தாள்
பூஜைக்கு வைக்க
அக்கா ரோஜாப் பூ பறித்தாள்
தன் கொண்டையில் சூட
தங்கை மல்லிகைப் பூ பறித்தாள்
கூந்தலில் சரம் தொடுக்க
அப்பா செவ்வரத்தம் பூ பறித்தார்
நிறைகுடத்தின் குறை தீர்க்க
அத்தை கனகாம்பரப் பூ பறித்தாள்
கழுத்தில் மாலையிட
காவலுக்கு நின்ற கள்ளிச் செடி
கண்கலங்கிக் கேட்டது
கள்ளிச் செடியின் பூ வும்
ஏழைத் தாயின் குழந்தையும்
தீண்டத்தகாதவையோ?


(வலம்புரி - 03 . 12 . 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதியின் மீதி

கண்ணீரில் கரைந்திட்டகனவுகள்
இதயத்தில் வலிதந்த நினைவுகள்
இடம் வலம் தெரியாத பொழுதுகள்
இவைதான் இன்றைய மீதிகள்



உறவுகள் தினமும்
உதிரத்தில் உதிர்ந்தன
தாயும் தந்தையும்
தரையினில் மடிந்தனர்
பாட்டியும் பாட்டனும்
படுக்கையில் இறந்தனர்
கூடிப் பிறந்தவர்
குருதியில் நனைந்தனர்



மனமாரவாழ்ந்த
மனையும் வீழ்ந்தது
ஓடி விளையாடிய
முற்றமும் தாழ்ந்தது
ஆசையாய் வளர்த்த
செடிகளும் ஒடிந்தன
சேர்த்துவைத்த சொத்துக்கள் அழிந்தன

விழுமிய விழுதுகள் இடையில் அறுந்தன
கல்விச் சாலைகள் கருவறை இழந்தன
மூத்தகுடியின் முடியது சரிந்தது
நிரந்தரமுகவரி நிமிடத்தில் தொலைந்தது

எனது பெயரும் பலவாயப் போனது
அயலவர் என்னை அனாதை என்றனர்
அரசு என்னை அகதி என்றது
ஏற்றுக்கொள்வோர் யார் இங்கு
என் பரம்பரையின் மீதி நான் என்று.

(சுடர்ஒளி - 21 . 11 . 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தா(தூ)ய்மை

நம் விரலை தீ சுட்டவேளை
தன் கண்ணீரால் காயத்தை
ஆற்றியவள் தாய்

தரையின் குளிரை முதுகோரம் தாங்கி
மார்போடு எம்மையணைத்து
தாலாட்டுப் பாடியவள் தாய்

வலிதாங்கிய வயிற்றில்
எம் பிஞ்சுப் பாதங்கள் உதைக்கையில்
மனதாரச் சிரித்தவள் தாய்

கல்தட்டி தரையில் வீழ்ந்தபோது
கண்ணில்லையோ என்றெம்மை ஊர்பேச
கல்லைத் திட்டி தூர வீசியவள் தாய்



நோயுற்ற வேளையிலே
கண்ணீரோடு வெந்நீரிட்டு
குளிப்பாட்டியவள் தாய்

தப்பேதும் நாம் செய்தபோதும்
தகுந்த நல் வழி சொல்லி
அன்பினைப் பொழிந்தவள் தாய்

கல்வியிலே கரைசேர நாம் விடைதேட
விளக்கொளியில் கண்விழித்து
விடைதேடி விளக்கியவள் தாய்

கருவறையில் மட்டுமல்ல
தன் கல்லறையிலும் நம்மைச்
சுமப்பவள் தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுயசிற்பி

பிண்டமாய் பிறந்த உடலுக்கு
மெய்யுருக் கொடுத்து நற்சிலையாக்கு
உன்னை நீயே சிற்பியாக்கு
காயப்பட்ட வெறும் கற்கள்தான்
கலைநயம் மிக்க சிலையாவது
அனுபவத்தையே அடித்தளமாக்கு
தோல்விகளை உளியாக்கு
துரோகங்களை சுத்தியலாக்கு
சவால்களை சாரமாக்கு
ஏமாற்றங்களை ஏணியாக்கு
துன்பங்களை தூரிகையாக்கு
வலிகளை வர்ணங்களாக்கு




புத்தர் காந்தி யேசுவை மாதிரியாக்கு
உணர்வு பூர்வமாய் உருவத்தை செதுக்கு
அறிவு பூர்வமாய் அளந்து செதுக்கு
சிந்தனையால் சிரத்தைச் செதுக்கு
வீரத்தால் தோள்களைச் செதுக்கு
அன்பினால் இதயத்தைச் செதுக்கு
மென்சொல்லால் செவிகளைச் செதுக்கு
உண்மையால் உதட்டைச் செதுக்கு
நேர்வழியில் பாதங்களைச் செதுக்கு
நம்பிக்கையை மட்டும் கரங்களில் செதுக்கு
கல்லாய்க்கிடந்த சிலைகூட
நம்பிக்கையால்தான் கடவுளானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெழுகுவர்த்தி



உச்சந் தலை தீ சுமக்க
உடலுருகி ஒளி பரப்ப
தனித்து நின்ற மெழுகுவர்த்தி
மனதுருக மனிதர்
இல்லையென்றெண்ணி
தானே உருகி அழுகிறதா?
இல்லை தன் சுவாலை சுட்டெரித்த
விட்டல் பூச்சிகளுக்காக அழுகிறதா?
தன் சுவாலை மட்டுமல்ல
தானும் சாகும்வரை தலை நிமிர்ந்து
மிடுக்காக நிற்கிறதே
தியாகச் சுவாலை பெருகப் பெருக
உடலை உருக்கி தாழ்ந்து போகிறதே
இது தான் தியாகத்தின் சின்னமா?
தன்மீது கொள்ளியிடப்படுவது
மனித குலத்துக்கு தெரிவதில்லை
இங்கு உச்சியில் கொள்ளி வைத்தும்
சுவாலை விழியால் தன் அழிவை
அமைதியாய் ரசிக்கிறதே இந்த
ஈகையில் இறக்கும் மெழுகு உடல்.

(உதயன் - 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீ(வி)தி விபத்து



வாகனக் கணக்கெடுப்பு
நம் சனத்தொகைக்கு சமனோ?
வீதிகள் எல்லாம் அகன்றது இங்கு
நம் ஆயுள் மட்டும் குறைந்தது இங்கு
சமிக்ஞைகள் இல்லாத சறுக்கிடும் வீதி
சமிக்ஞை இன்றி திரும்புதல் முறையோ?
எமனின் வாகனம் எருமை என்றனர்
இன்று எமனின் வாகனம் டிப்பர் என்றனர்
மாட்டுவண்டி சவாரிகள் வெட்டவெளியிலே
வாகனச் சவாரிகள் வீதியின் நட்டநடுவிலே
முந்திவருவோர்க்கு
மரணம்தான் பரிசு
பின்னால் வந்தவர்க்கு காயங்கள் பரிசு
தனியார் வாகனம் தடுமாறி ஓடும்
துவிச்சக்கரவண்டி சமாந்தரமாய் ஓடும்
மோட்டார்சைக்கிள் பாலத்திலும் பாயும்
பேருந்து தினமும் மின் கம்பத்தில் மோதும்
சிந்திய குருதிகள் போதும் நம் மண்ணில்
இரத்த வங்கியும் வற்றிவிட்டது
செய்யும் தொழிலே தெய்வம் என்பர்
இங்கு பயணிகள் தெய்வம் சாரதியன்றோ
கடிகார முள்ளை சிலநிமிடம் முன்னகர்த்து
வேகமானியின் முள்ளைச்சற்று பின்னகர்த்து
வீதியில் இனிமேல் வேகம் வேண்டாம்
விவேகம் போதும் விதியைவெல்ல.

(உதயன் - 02 . 12 . 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க்கை முரண்கள்

முட்கள் பூக்களாய் மலர்ந்ததும்
பூக்கள் முட்களாய் காயப்படுத்தியதும்
நினைவிருக்கிறது

தென்றல் சூறாவளியாய் சுழற்றியதும்
சூறாவளியே தென்றலாய் வருடியதும்
நினைவிருக்கிறது

மழையில் முழுவதும் உலர்ந்ததும்
வெயிலில் நடுங்கி நனைந்ததும்
நினைவிருக்கிறது

பட்டினியில் பாரம்சுமந்து நடந்ததும்
மும்முறை உண்டபின் உறங்கியதும்
நினைவிருக்கிறது

கடலலைகள் மௌனம் சாதித்ததும்
சுடுகாடுகள் ஆரவாரித்து ஆர்ப்பரித்ததும்
நினைவிருக்கிறது

தரையில் கிடந்து துடித்தததும்
நீரில் மிதந்து களித்ததும்
நினைவிருக்கிறது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்பு நயவஞ்சகம் செய்ததும்
பகைமை பக்கமிருந்து பணிவிடை செய்ததும்
நினைவிருக்கிறது

எமது நிழலை நம்ப மறுத்ததும்
பிறர் நிழலில் தங்கி வாழ்ந்ததும்
நினைவிருக்கிறது

வெளிச்சத்தில் ஓடி ஒளித்ததும்
இருளில் தேடி அலைந்ததும்
நினைவிருக்கிறது

பார்வையிருந்தும் பார்க்காமல் இருந்ததும்
பார்வையற்றோர் சாட்சிகளாய் இருந்ததும்
நினைவிருக்கிறது

பட்டமரங்களில் நிழல் தேடியதும்
பச்சை மரங்களை விறகாக்கியதும்
நினைவிருக்கிறது

மண்தரையில் நன்றாய் உறங்கியதும்
பஞ்சுமெத்தையில் உறக்கமின்றி புரண்டதும்
நினைவிருக்கிறது

துப்பாக்கிகள் கவிதைவடித்ததும்
பேனாக்கள் உயிர் பறித்ததும்
நினைவிருக்கிறது

கல்லறைகள் கதைசொன்னதும்
நடைப்பிணமாய் நாம் அலைந்ததும்
நினைவிருக்கிறது


மனிதர்களாய் நாம் வாழ்ந்ததும்
பின் மிருகங்களாய் நாம் வாழ்வதும்
நினைவிருக்கிறது

(உதயன், பொங்கல் சிறப்பிதழ் - 15 . 01 . 2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் மரித்த இடம்



மனிதம் மரித்த முள்ளிவாய்க்காலில்
மரித்துக்கொண்டிருக்கும் மனிதத்தின்
மடியில் தவழ்கிறது குருதிக்குழந்தை
மரணங்கள் நிறைந்த யுத்தம் தொடர்கிறது

தாயுயிர் பிரிந்ததை தானறியாது
தாய்மடியேறி தன்பசிபோக்க
தவழ்ந்து பாலருந்தும் பச்சிளம்குழந்தை
தரணியே ஸ்தம்பித்துப்போன தருணம்

குருதியைப்பாலாக்கி குழந்தைக்கு கொடுப்பவள்
கும்பிடும் தாயென்று நாமறிவோம்
குருதி தெறித்து இறந்தபின்பும்
குருதியோடு பாலூட்டும்
குலங்காத்த தாயவளை
குடிகள் நாமென்னவென்று
தாணுணர்வோம்?
போரெடுத்து கொலைருசித்து
போசித்த இனவாதப் பாதகரே
போர்த்திவைத்த மார்பெடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரெடுத்து கொலைருசித்து
போசித்த இனவாதப் பாதகரே
போர்த்திவைத்த மார்பெடுத்து
முலைருசித்து
போராடிப் பசிதீர்க்கும் மழலையின்
போராடும் மனம் புரிந்திடுமா
உந்தனுக்கு?

எதிரிலிருப்பதே எதுவென்றறியாப்
பாலகனை
எதிர்காலத்தில் மண்மீட்கப்
புறப்படும்
எதிரியென்றெண்ணி எதற்காக எறிந்தாய்
எறிகணையை அவன் தாய்மீது

குழந்தையின் முகத்திலும்
அகத்திலும்
குடிகொள்ளவில்லை அச்சம்
குருத்தைப் பிரித்து தாய்
மரத்ததை வீழ்த்திய
குந்தகக்காறர்களே அது
ஏனென்று புரிகிறதா?
குருத்துக்கு இனி இழப்பதற்கு
ஏதுமில்லை அதனால்

தர்மத்தின் வாழ்வுதனை சூதுகவ்வும்
தர்மம் மறுபடியும் வெல்லும்
தளிரிந்தத் தமிழ்மகன் கைகள்
தரணியை ஒருநாள் வெல்லும்.

(உதயன், பொங்கல் சிறப்பிதழ் - 15 . 01 . 2016)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வறுமையின் நிறம்

நட்டுவைத்த நான்கு மரத்தடிகள்
நாலாபுறமும் உரப்பைச் சுவர்
நிலவொளி கொடுக்கும்
ஓட்டைகள் நிரம்பிய கூரை

நிழல் மரத்தடியில் மூன்றுகல்
அதில் அவர்களின் பசியைப்போல்
நீறுபூத்த நெருப்பு அதன்மேல்
நெளிந்த கஞ்சிப்பானை



பாதிஉடல் மறைக்கும்
இலவசப் பள்ளிச் சீருடைகள்
அதிலும் வறுமையின் நிறம்
பழுப்பாய்த் தெரிகிறது

கந்தலாகியும் மானம் காத்திடும்
தன்னிறம் மறந்தசேலை
அதில் ஆங்காங்கே பலவர்ண
ஒட்டுத் துணிகளின் வண்ணக்கோலம்

படுக்கையில் பாயோடு கிடக்கும்
குடும்பத்தின் மூத்த உயிர்
வாழ்வுக்கும் மரணத்துக்கும் நடுவே
ஒருமருந்துப் பாலத்தில் அவர் உயிர்


யானைகட்டி தீனிபோட்ட வம்சம்
எறும்புண்ணக்கூட ஒரு சோறு
சிந்தமுடியாத வறுமையின் வலி
என்றுதீரும் இந்தச் சாபம்.

(சுடர்ஒளி - 05 - 11 . 06 . 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிரோடு போகும் ஊர்வலம்



பெற்றெடுத்த முகம் மறந்து
வளர்த்த கடன் கழித்து
உற்ற உறவுகள் துறந்து
ஊமை ஊர்வலமாய்
ஊர்கூடிப் போவதைப் பார்

உயர்திணையாய்
பிறந்த உடல்
உயிர் பிரிந்து போனதனால்
அ.்.றிணையாய்
போவதைப் பார்

தூற்றிய உள்ளமெல்லாம்
போற்றிப் பாடிடவே
பாடையிலே போவதைப் பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழகிய நண்பர்கள்
பட்டாசை வெடிக்க
கூடிப்பிறந்தவர் நினைவது இழக்க
வந்தவர் கூட்டத்தில்
ஆயிரம் ஆராய்ச்சி

கட்டிலில் கிடந்த உடல்
கட்டில்லாப் பாழும் கிணற்றில்
கட்டிழந்து கிடந்ததெப்படி?

பத்திரிகை சொல்லும்
மர்ம மரணமென்று
பக்கத்து வீடு சொல்லும்
தற்கொலையென்று
ஊர் சொல்லும்
இது கொலையென்று

சுடுகாடு வந்ததும்
புதுக் குழப்பம்
கொலையா?
தற்கொலையா?
எரிப்பதா?
இல்லைப் புதைப்பதா?

கொலையாய் இருப்பினும்
நீதி கிடைக்குமா?
சாந்தி கிடைக்குமா?
தீயினில் வெந்திடும்
புதிர் தந்த உடல்
உடன்கட்டை ஏறிடும்
நீதியும் உண்மையும்.


(உதயன் - 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்குக் கயிற்றில் ஓர் உயிர்

நீதி மறுக்கப்பட்டதால்
மறைக்கப்பட்ட ஒரு முகம்
தூக்கு மேடையில்
தன் முடிவுக்காய் காத்திருக்கிறது
முகம் மூடப்பட்டிருப்பது
அவன் உலகை பார்த்துவிடக் கூடாது
என்பதற்காக அல்ல
உலகம் அவனைப் பார்த்துவிடக் கூடாது
என்பதற்காக
அவன் மனதில் பற்பல கேள்விகள்
நான் செய்த தவறுதான் என்ன?
வஞ்சனை வலைதனை அறுத்ததா?
அழுதிட்ட கண்களை துடைத்ததா?
கயவர்கள் கருணையை மறுத்ததா?
வீழ்ந்தவன் தோள்பற்ற நினைத்ததா?
விடைதேடிக் கிடைக்குமுன்
இறுதியாய் ஒருகேள்வி அவனிடம்
உன் உடலை புதைப்பதா? எரிப்பதா?
இறுதி வார்த்தையாய் பதிலுரைத்தான்
நீதிதேவதையை புதைத்திருந்தால்
என்னையும் புதையுங்கள்
எரித்திருந்தால் என்னையும் எரியுங்கள்
தூக்குக் கயிறு அவனை முத்தமிட்டது
காரணம் தெரியா மரணங்களில்
இதுவும் ஒன்றாய்
நரகம் துறந்து சொர்க்கம் பறந்தது
அவனது ஆவி




(சுடர் ஒளி - 07 . 05 . 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினை விதைப்பவன்




கும்பிட்டு மண்டாடி இடம் பிடிப்பர்
கூடியிருந்து குழிபறிப்பர்
முகத்தின் முன்னே புன்னகைப்பர்
முதுகின் பின்னே புண்ணிடுவர்
மேடையில் உரிமைகள் இவர் உரைப்பர்
இருப்பிடம் வந்ததும் எட்டி உதைப்பர்
ஆலயம் தோறும் வழிபடுவர்
மதவெறி கொண்டு தீயிடுவர்
ஏறும்வரைதான் நாம் ஏணி
இறங்கும்போது நிற்கவேண்டும் கூனி
தினமும் படிப்பது நற்சிந்தனை
தினம் அவர் மனதில் துர்சிந்தனை
வாழ்க்கை என்பது ராட்டினம்
நீ நிலையாய் மேலே நிற்பதேது
தர்மம் வளர்த்த நீதித் தீயில்
அதர்மம் ஒருநாள் நீறாய்ப் போகும்
நீ கொடுத்த வலி அனைத்தும்
வரமாய் வந்துஉனைச் சேரும்

(உதயன் - சூரியகாந்தி - 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதி



பகுத்தறிவிலாதார் கூறிடும் கூற்று
தோற்றுப்போனவர் கூறிடும் சாட்டு
இறப்பு நடந்திடின் கூறிடும் ஆறுதல்
விபத்து என்பதை விலக்கிடும் வார்த்தை
குற்றம் புரிந்தவர் தப்பிடும் பாதை
சோம்பேறிமனிதரின் உச்சரிப்பு மந்திரம்
ஏழைமக்களின் ஏழாம் அறிவு
முயற்சியுடையோனின் முட்டுக்கட்டை
அறிவாளிகளின் செல்லாக் காசு
நம்பிக்கையும் முயற்சியுமே வெற்றியின் பாதை
விதியை நம்பி விழுந்துபோகாமல்
மதியைநம்பி எழுந்து நட...

(உதயன் - வைகாசி 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீயும் தாய் வயிற்றில் உதித்தாயோ !



காட்டேரிக் கழுகுகளாய்
காமவெறி தலைக்கேற
தறிகெட்டு நடந்தவரேயூ

தாய்ப்பால் அருந்தி
தாய் மடியில் தவழ்ந்தீரோ!
இல்லை
காமத்துபால் குடித்து
காட்டு வாழ்க்கை வாழ்ந்தீரோ!

ஐந்தறிவு ஜீவன்களும்
தம் வரையறைக்குள் அடக்கமாய்
அந்தரங்கம் பேணும்
ஆறறிவு ஆண்வர்க்கம் நீ
தெருநாய்போல் நடப்பதேனோ?

கிருசாந்தி இசைப்பிரியா
சீருடையால் பட்டதுன்பம் அறியாயோ!
சீருடை அணிந்த இந்த
சிட்டுக்குருவி தன்னை சீரழித்த காமுகரே
நீயும் தாய் வயிற்றில் உதித்தாயோ!
இல்லை

சாக்கடையில் முளைத்தாயோ!
துப்பட்டா சரிந்தாலே
அரலிவிதை உண்டு
உயிர்மாய்க்கும் நம் குலத்தில்
அலரிப்பற்றைதனில் அரக்கனாய்
வெண்சீருடையை அவிழ்த்தாயோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னவயதில் சீருடை அணிந்து
நீ சீராய் பள்ளி சென்றிருந்தால்
நம் பண்பாடு உனக்குபுரிந்திருக்கும்
உன் உயிர்ப்பசிக்கு தீனிபோட
இருட்டில் திருடிய நீ
சாட்சி சொன்ன வன்மம் தீர்க்க
கூட்டாளி கழுதைகளோடு
கூட்டு வன்கொடுமை செய்தாயோ

மிலேச்சத்தனமாய் மிருகங்களாய்
உடல்தசையை மென்ற உந்தன்
உயிர்குடிக்கும் தூக்குக்கயிறும்
உன்மீது காறித்துப்பும்

கயவர்வர்கள் உங்கள்
உடல் மண்ணில் உக்கிப்போக
நம் மண்ணும் தரிசாய்ப்போகும்

வித்தியா சிந்திய குருதியில்
உந்தன் உடல்உருகிட வேண்டும்
உயிரோடு உன்னைதீயிட வேண்டும்
எதிர்கால சந்ததி
இதை உணர்ந்திட வேண்டும்




(உதயன் - 31 . 05 . 2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாலகனும் பாலைப்பழமும்



நட்டநடு வீதியலே
சுட்டெரிக்கும் வெயிலிலே
செருப்பறியாப் பாதங்களோடு
பாலைப்பழம் விற்கிறான்
பாலகன் ஒருவன்
ஒரு கை பாலைப்பழம் சுமக்க
மறு கை வாகனங்களை மறிக்க
வெந்தணல் வெயிலில்
வெந்திடும் பாதங்கள்
நாட்டியமாடுகிறது சூடு தாழாமல்
"இது சுட்டபழமா? சுடாதபழமா?"
என்று நையாண்டி செய்கிறான்
வெளிநாட்டுப் பணத்தில்
தண்டமாய் ஊர்சுற்றும் இளைஞன்
"நீசொன்ன விலையின் பாதிதரவா ?"
என்று பேரம் பேசுகிறார்
பென்ஸ் காரில் வந்த மற்றொருவர்
மீடியாக்காரர் வீடியோ எடுத்தனர்
சூடான செய்தியாய் இதை வெளியிட
பால் வடியும் பாலைப்பழம்தான்
தனக்குபாலூட்டியவளின் பசிதீர்க்கும்
என்ற உண்மை அவனைத்தவிர
வேறுயாரறிவார் ?
நாவறண்டு விற்ற காசோடு
வீடு செல்கையில்
பாதிவெறியில் பாதிவழியில்
வழிமறித்துப் பறிக்கிறான்
குடிகாரத் தந்தை குடிதனைக் கெடுக்க
வெந்த காலோடும்
நொந்த மனதோடும்
மீண்டும் பாலைமரமேறினான்
குடும்பத்தின் பசிபோக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகிம்சையின் தந்தை


அடிமை விலங்கதை
அகிம்சையால் உடைத்த
சத்தியாக்கிரக போராளி
தென்றலாய் இருந்த இவரை
புயலாகமாற்றியது
ஒரு தென்னாப்பிரிக்கப் பயணம்
தலைப்பாகையணிந்தங்கு
வழக்காடத்தடை
புகையிரதத்தில்
முதலாசனத்தில் அமர்ந்திடத்தடை
இவையனைத்தும்
காந்தி கறுப்பினம்
என்பதன் பிரதிபலிப்பு
கறுப்பினம் என்றும் தாழினமில்லை
என்பதை உலகிற்குணர்த்தி
அகிம்சையின் வழி அடியெடுத்தார்
மக்களை அலையெனத் திரட்டினார்
ஆட்கொல்லி ஆயுதங்களை
அறவழி அகிம்சையின் அடியில்
அடிபணியவைத்தார்
இவரின் அகிம்சையும்
அறமும் மனவுறுதியும்
குருதிசிந்தாப் பெரும்போராய்
வெள்ளையரை வெளியே விரட்டியது
இவரது சத்தியசோதனை
அகிம்சையின் சாதனை
நம் அனைவருக்கும் அதுவே போதனை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதனும் கடவுளும்




இறைவன் நினைக்கிறான் பூமியில்
மனிதன் மனிதனாக வாழவேண்டும் என்று
மனிதன் நினைக்கிறான் பூமியில்
இறைவன் ஒரு நாளேனும்
மனிதனாய் வாழ்ந்துபார்க்கட்டும் என்று

## முள் விரிக்கும் சிறகு



கழுகுதன் கூட்டில்
முட்களை வைப்பது
தன் குஞ்சுகளைக்
காயப்படுத்துவதற்கல்ல
சிறகு முளைத்ததும் குஞ்சு வலியால்
வெளியே பறக்க முயற்சிப்பதற்கு
இறைவன் கஸ்டங்களை கொடுப்பது
நாம் துவண்டுபோவதற்கல்ல
துணிவோடு வாழ்வதற்கு

## சமாதானச் சின்னம்




கோவில் கோபுரத்திலும்
தேவாலய முகட்டிலும்
மசூதியின் கூரையிலும்
பாகுபாடின்றி குடியிருப்பதால்தானோ
வெண்புறாக்கள் சமாதானச் சின்னமாய்
தேர்ந்தெடுக்கப்பட்டன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிடப் பாவிகள்



மனிதகுலப் பாவம் போக்க
ஏழையாய் மாட்டுத் தொழுவத்தில்
மானிடப் பிறப்பெடுத்து
முள்முடி தரித்துப் பின்
சிலுவையில் அறையப்பட்டார்
இயேசுபிரான்
ஆனாலும் இந்தப் பாவிகள்
இன்னமும் திருந்தவில்லை
மனிதனின் தலையில்
அதிகாரமுள் முடிதரித்து
வஞ்சக ஆணியால்
மனிதத்தையல்லவா சிலுவையில்
அறைகின்றனர்
மனச்சாட்சி மரித்துப்போன
இந்த மாந்தர்களுக்காக
எத்தனை இயேசுபிரான்
சிலுவை சுமந்தாலும்
இவர்களின் பாவம் தீராது.

(உதயன் - சூரியகாந்தி - 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிமிர்ந்து செல்



நிமிர்ந்து நீ நடந்தால்தான்
நிழல்கூட உன் பின்னேவரும்
மண்டியிட்டு நீ போனால்
தோல்வி உன் தோளைப்பற்றும்
அச்சம் கொண்டு நீ வாழ்ந்தால்
மரணம் மடியில் பள்ளிகொள்ளும்
துச்சமாய் எண்ணி துணிந்துநில்
மரணம் உனக்கு அஞ்சும்
உணர்வுகள் உனது உடைமை
அதை நிதானமாய்க் கையாள்வதே
உனது கடமை
அதனை அடக்க நினைப்பதோ
சுய அடிமை
பிறரை மிஞ்சிவாழ்
பிறரிடம் கெஞ்சி வாழாதே
அது மடமை
இன்பமும் துன்பமும் வாழ்வின்
இருபக்கங்கள்
இன்பத்தை சேர்த்துக்கொள்
துன்பத்தைக் கற்றுக்கொள்
உன் கையில் உள்ள
வாழ்க்கை என்ற பாத்திரத்தில்
அமுதா விசமா என்பதும்
உனதுகையில்

(வலம்புரி - 10 . 08 . 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசி

பாட்டாளிகளின் பாடுகளுக்கும்
பாமரரின் சவால்களுக்கும்
அத்திவாரமிட்டது பசி

தன்மான மனங்களையும்
வயிற்றுக் குழிக்குள்
விழுத்துவது பசி

பச்சைக் குழந்தையும்
பிச்சையெடுக்க தெருவில்
நிறுத்தியது பசி

ஒருபிடி அரிசி உண்ண
பல மூடைகளை சுமக்க
வைத்தது பசி

காரிருளில் கயமைத்தனமாய்
அன்னமிட்ட வீட்டிலேயே
கன்னமிட வைத்தது பசி

அன்னையை விட்டு
அந்நிய நாட்டிற்கு
ஓடவைத்தது பசி

ஓடி அலைந்து வேலை தேடி
பிறர் காலைப் பிடித்து
வேலைக்கமர்த்தியது பசி

குடும்பச் சுமைகள் தாங்காமல்
தன் உடற்சுமையை கயிற்றுச்
சுருக்கில் தூங்கவைத்தது பசி

இவை அனைத்தும் போதாதென்றா
இறந்த பின்பும் வாயில்
அரிசி இடுகின்றோம்
பிணத்தின் பசிபோக்க




(உதயன் - 2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிற உயிரை நேசி



உணவூட்டி நீர்காட்டி
தவிடு புண்ணாக்கிட்டு
நல்லின ஆடு வளர்த்தாய்
அதை வேள்வியில் அறுத்தாய்
உன் ஆயுள் நீள்வதற்கு

கோமாதா என்றழைத்து
கன்று ஒன்றை ஈன்ற பின்
குருதியை பாலாக்கி
கன்றுக்கு கொடுக்கையிலே
அதைக்கறந்து அபிசேகம் செய்தாய்
உன் நோய்நொடி நீங்கிவிட

விதை நட்டு பாத்திகட்டி
உரமிட்டு நீர்பாய்ச்சி
அழகான செடிவளர்த்தாய்
காலை அதில் பூ மலர
அதைப்பறித்து மாலையிட்டாய்
உன் மணமாலை நிலைப்பதற்கு

கோழி தன் இனம்பெருக
இட்டமுட்டை மாமிசமாம்
நாகபாம்பின் புற்றுக்கு
முட்டை வைத்தாய்
உன் நாகதோசம் போக்கிவிட

மனிதன் விலங்குகள்
பறவைகள் செடிகொடிகள்
எல்லாமே இறைவனின் படைப்பு
அதை ஏன் நீ பறித்தாய்?
உன் வாழ்வு நிலைத்திட
உன்னிடத்தலிருந்து.
நீ எதைக் கொடுத்தாய்?

பிற உயிரை உன்னுயிராய் நேசி
ஆனந்த வாழ்வு கிட்டும்
இனியேனும் இதை யோசி.

(உதயன் சூரியகாந்தி - 06 . 10 . 2013)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புது மொழிகள்

காற்றை உருவாக்கி தூற்றிக்கொள்
காலத்திற்காய் காத்திராதே
காலத்தை உனக்காக உருவாக்கு

இலவுகாத்த கிளிக்குக்கூட
பஞ்சு பரிசாக கிடைக்கிறது
அதில் தலையணை நெய்து
படுத்துறங்க கற்றுக்கொள்



தனிமரமும் தோப்பாகும்
தனிமரம் நாற்றிசையும்
நல் விதைகளைத் தூவின்
அவை தோப்பாகும்

ஒரு கை தட்ட முடியாது
ஆனால் ஒருகையின்
விரல்கள் இணைந்து
சொடக்குப் போட்டால்
ஓசைவரும்

அகத்தின் அழகை
முகத்தில் தேடாதே
முகமூடி அணிந்த முகங்களையே
அதிகம் சந்திப்பாய்


குரங்கின் கையிலுள்ளபூமாலை
தகுதியற்றவர் கழுத்தில் போட்ட
பூமாலையை விடமேலானது

கிட்டாதாயினும் எட்டிப்பார்
ஏணியெதுவென்று எண்ணிப்பார்
தொடர்ந்து முயன்றால்
தொடமுடியாதது எதுவுமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீ என்னைப் பிரிந்தால்..




என்னோடு நீ இல்லாதபோது
படி ஏறிய பாதங்கள்
பாதாளத்தில் தடம் பதிக்கிறது
கண்ணோடு வந்த கனவுகளும்
காலையில் கலைகிறது
வெற்றிகள் தொலைவாக
தோல்விகள் வரமாகிறது
கேள்விகள் சுமையாக
பதில்கள் விலையாகிறது
பாதைகள் இருள் சூழ
பயணங்கள் பயமாகிறது
இலக்குகள் தவறிவிட
இலட்சியம் இரையாகிறது
இரவுகள் இடம்மாற
இதயமும் கனமாகிறது
உனக்குள் என்னை வளர்ப்பதா?
எனக்குள் உன்னை வளர்ப்பதா?
"தன்னம்பிக்கையே" நீ என்னைப் பிரிந்தால்
என் மரணம் நிச்சயமே

(சுடர்ஒளி - 23 . 01 . 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சன்மானமாகும் அவமானங்கள்



புகையிரதப் பாதையில்
புதிதாய் மலரும்
பூக்களைப்போல்

பாறையில் வீழ்ந்து
பாரினில் முளைவிடும்
விதைகளைப்போல்

சேற்றில் நின்றாலும்
தலை நிமிர்த்தி நிற்கும்
செந்தாமரைபோல்

அலைகள் மோதினும்
உடைந்திடாமல்
உருவம் மாற்றி
உருண்டுநிற்கும்
கூழாங்கற்களைப்போல்

அவமானங்களை
சன்மானங்களாக்கி
நேர்மையாய் நிமிர்ந்து நில்
உனக்கென்றொரு
சரித்திரம் பிறக்கும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆ[நிரா]சைகள்


தூக்குக் கைதியின் இறுதி ஆசை
"நிரபராதி தூக்கில் தொங்குவது
இதுவே இறுதியாகட்டுமென்பது"

ஏழைத்தாயின் ஒரே ஆசை
"தன் பிள்ளைகள் ஒருநாளேனும்
மும்முறை உணவுண்ணவேண்டுமென்பது"

விதவைப் பெண்ணின் ஆசை
"தன் கூந்தலும் இனியொருமுறையேனும்
பூச்சூடவேண்டுமென்பது"



நோயாளியின் ஆசை
"இந்த மருந்துப் புட்டிகளிடமிருந்து
விடுதலைபெறவேண்டுமென்பது"



மூச்சிரைக்கும் முதியவரின் ஆசை
"ஆவிபோகுமுன் கடன்பட்டு
கடல்கடந்து அனுப்பிய மகன்
முதியோர் இல்லதிலிருந்து தன்னை
அழைக்கவேண்டுமென்பது

அநாதைச் சிறுவனின் ஆசை
"கனவிலேனும் கண்முன்னே
தாய்தந்தையைக் காணவேண்டுமென்பது"

மனிதகுலத்தின் ஆசை
"மரணமில்லாத நீண்டஆயுள்
வேண்டுமென்பது"

படைத்த இறைவனின் ஆசையோ
"தான் படைத்தபடியே மாற்றமில்லாத
ஒரு மனிதனையாவது காணவேண்டுமென்பது"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமையும் கடமையும்

கருவறையில் இருக்கும்போதே
ஒரு உயிரின் புது வரவு
"உயிர்வாழும் உரிமைக்கு"
ஊட்டமுள்ள உணவோடு மருத்துவமும்
தேவை இங்கு



பிள்ளைப்பருவம் எய்தி விட்டால்
"மேம்பாடு" காண்பதற்கு
உடல் உள ஆன்மீக விருத்தியுடன்
பாடசாலை செல்லவேண்டும்
இடை விலகல் இல்லாமல்

வளர்ந்துவரும் பிள்ளைக்கு
"பாதுகாப்பு" தேவை இங்கு
பாரபட்சம், துஸ்பிரயோகம்
புறக்கணிப்பு விலகி இங்கு
வளமாக வாழவேண்டும்

சிறு பிள்ளை ஆனாலும்
"பங்குகொள்ளல்" வாய்ப்புண்டு
தன்நிலை அறிவதற்கும்
தரவுகளைப் பெறுவதற்கும்
கருத்துரிமை அவர்க்குண்டு

உரிமைகள் மட்டுமல்ல
எங்கள் கடமைகளும் இவையே.


(வலம்புரி - 24 . 02 . 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரோசை

அதிகாலை ஆலயத்தின்
மணியோசை
அலைகடல் கரைமுட்டும்
அலையோசை
காற்றில் கிளையாடும்
இலையோசை
கார்மேகம் முட்டிமோதும்
இடியோசை
வளைகரங்கள் வளைந்தாடும்
வளையோசை
மழைநீர் தரையிறங்கும்
மழையோசை
சிற்பத்தில் உளி முட்டும்
கலையோசை
கருநிற கலைவாணர்
குயிலோசை
பறவைகள் உலர்த்திடும்
சிறகோசை
மழலைகள் மகிழ்ந்திடும்
சிரிப்போசை
இறைவனின் படைப்பில்
எது இங்கு சிறப்போசை
அது உயிர்ப்பினை உணர்த்திடும்
நம் இதயத்துடிப்பின் உயிரோசை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடித் தொலைத்த வாழ்வு

ஒரு வழிப் பாதை அதில்
மறுக்க முடியாத வாழ்க்கைப் பயணம்
நாம் ஒளி நோக்கி ஓடினாலும்
இருள் பின்னால் துரத்தும்
நிஜமாக நீ இல்லாது போனால்
நிழல்கூட உன் பின்னால் வராது
வலி மறக்க நினைத்தாலும்
அதற்கு வழியின்றிப்போகும்
இன்பத்தை தேடி அலைந்தால்
அதில் துன்பம் வந்து சேரும்
சொத்துக்கள் தேடிச் சேர்த்தால்
நம் இளமை வற்றிப் போகும்
சொத்து கைவிட்டுப் போனால்
சொந்தங்கள் விலகி ஓடும்
பணமென அலையும் உள்ளம்
பண்பினை மறந்து நிற்கும்
பதவியை வாங்கி வந்தோம்
தன்மானத்தை விற்ற பின்பு
அழிவுறு வாழ்வுதனில் ஏன்
அழிவுறா ஆசை நமக்கு
தேடித் தேடியே தொலைந்தது
நம் வாழ்க்கைப் பொக்கிசம்.



(சுடர்ஒளி - 20 - 26, மாசி, 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரப்பையின் உள்ளக் குமுறல்

வயல்வெளியில் நெல் செழிக்க
உரம்சுமந்து வந்தேன் அங்கே
உடல்கள் விதைக்கப்பட்டது
குருதி இறைக்கப்பட்டது
இனி உரமெதற்கு உடல்கள் உக்கவா?
உரத்தை உதறிவிட்டு காற்றில் பறந்தேன்



ஒரு அகதித்தாயின் கையில் அகப்பட்டேன்
பாத்திரங்களோடு
பாடப்புத்தகமும் சுமந்தேன்
முதல் இடம்பெயர்வில்
பாத்திரம் தொலைந்தது
இரண்டாவது நகர்வில்
பிள்ளையும் மடிந்தது
புத்தகம் அவர்களின் கொள்ளிவிறகானது

மரத்தடி நிழலில்
தாய்க்கு நான் பாயானேன்
அல்லும் பகலும்
அவள் கண்ணீரில் நனைந்தேன்
தறப்பாள் எடுத்து
தடியூன்றி கொட்டிலிட்டாள்
அங்கே அவள் மானம் காக்க கதவாய் நின்றேன்


மீண்டும் ஒரு மீள்குடியேற்றம்
எஞ்சிய துணிகளுடன்
குடும்பக் காட்டும் என்னுள்ளே
அவள் ஆடையைப்போல்
நானும் கந்தலானேன்
அவளோடு என் ஆயுளும் நீள்கிறது
ஏனெனில்
என்னைச் சுமந்ததால்
அவளும் என்தாயே.

(சுடர்ஒளி - 28 . 11 . 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டை வாழ்வு



பாதங்கள் இரண்டு
பாதைகள் இரண்டு
மனமெங்கு போகும்?

கண்கள் இரண்டு
காலங்கள் இரண்டு
கனவெங்கு தோன்றும்?

உருவங்கள் இரண்டு
துருவங்கள் இரண்டு
உணர்வெங்கு சேரும்?

உள்ளங்கள் இரண்டு
உண்மைகள் இரண்டு
உறவெங்கு வாழும்?


ஒத்துணர்வோடு
ஒருமித்து வாழ்ந்தால்
இன்பம் வந்துசேரும்.

(வலம்புரி - 07 . 10 . 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவரி தொலைந்த தேசம்




கலாசார கருவறை
கருச்சிதைந்து போனதேனோ?
கல்வியின் கலங்கரைவிளக்கம்
கரையொதுங்கிப் போனதேனோ?
கலைகளின் கோபுர கலசம்
களையிழந்து போனதேனோ?
வீரம் விளைந்தமண்
தரிசாகிப் போனதேனோ?
விருந்தோம்பலில் அட்சயபாத்திரம்
பிச்சைப்பாத்திரமாய் போனதேனோ?
விழுமிய விழுதுவிட்ட விருட்சம்
வேரறுந்து போனதேனோ?
கற்றறிந்தோர் நூலகம் இன்று
குற்றுயிராய் போனதேனோ?
தலைநிமிர்ந்து நின்றதமிழ்
தலைவணங்கிப் போனதேனோ?
இதுநம் தேசத்தின் விதிதானோ?
அல்லது அந்நியர் சதிதானோ?

(தினக்குரல் - 16 . 12 . 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுத்தறிவு



ஐந்தறிவு விலங்குகளை
அடக்கி ஆண்டது
பறக்கும் கிளியை கூண்டிலிட்டு
யோசியம் சொன்னது
தாய்க்கு காவலாய்
நாயை வளர்த்தது
மந்தியை வைத்து
சந்தியில் உழைத்தது
மலர்களைப் பறித்து
கூந்தலில் வாடவைத்தது
மரப்பிடிகொண்டு மரங்களைச்சாய்த்தது
மனித நிறங்களால்
பிரிவினை கண்டது
இடத்திற்கிடம்
மதங்களைக் கொண்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதையில் தன்பாதையை மறந்தது
வன்முறை வார்த்தையால்
மனங்கள் புண்பட்டது
துரோகங்களால்
மனிதன் துவண்டது
பெண்ணும் பொன்னும்
மண்ணும் தென்பட்டது
மெய்மை தோற்று
பொய்மை வென்றது
பொறுமை நீங்கி
பொறாமை நீண்டது
கடமை மறந்து
கயமை வளர்ந்தது
அன்பு விலகி
பழிவாங்கும் பகைமை நிலைத்தது
பிணத்தின்மீதும்
பணத்தை வைத்தது
உயிர்களை பறிக்க
துப்பாக்கி படைத்தது
அணுக்களால் உடலிருக்க
அணுகுண்டு போட்டது
படைத்தவனை தெருவெங்கும்
சில்லறைக்கு விற்றது
ஆராய்ந்து பார்த்தால்
அத்தனையும்
ஆறாம் அறிவாம்
பகுத்தறிவாலான பயன்

(சுடர்ஒளி - 07 - 13 . 01 . 2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு அகதியின் பயணம்



காடுமலை கடந்து வந்தோம்
காயங்கள் ஆற்ற அங்கு
உறவுகள் உடனிருந்தன

வறட்சியிலும் வாழ்ந்து வந்தோம்
இளைப்பாற மரங்களோடு
குளங்கள் இருந்தன

நீண்டதூரம் நடந்துவிட்டோம்
திரும்பிப் பார்த்தால்
பாலைவனப் பாதையில்
நான்மட்டும் நடக்கிறேன்

எங்காவது ஒரு துளிர்
எனக்கு நிழல்தர
எங்காவது ஒரு ஊற்று
என் நா உயிர்பெற

நம்பிக்கை மட்டுமே
என் வழித்துணை
பாதை தவறாமல் நடப்பேன்
என் வாழ்வை நோக்கி

(சுடர்ஒளி - 07 - 13 . 11 . 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாளங்கள்




மரணங்களின் நடுவே
மரத்துப்போன மனங்கள்
அடக்கி அடக்கியே
அடங்கிப்போன உணர்வுகள்
குனிந்துகுனிந்தே
கூன்விழுந்த முதுகெலும்புகள்
விழுந்துவிழுந்தே
விழுப்புண்ணுற்ற தேகங்கள்
உண்மைகளைஉரக்கச் சொல்லியே
உணர்விழந்த நாவின் நுனி
கண்ணீரால் கரைந்தே
களையிழந்த கன்னங்கள்
கனவுகளுக்குத் திரையிட்டே
களைத்துப்போன கண்மடல்கள்
நினைவுகளைசுமந்தே
தோற்றுப்போன தோள்கள்
நீதியைத்தேடிஅலைந்தே
தேய்ந்துபோன பாதங்கள்
இவைதான் நம் அடையாளங்கள்

(சுடர்ஒளி - 7 - 14 . 08 . 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்ட அரங்கேற்றம்



தொ(கு)ண்டர்கள் புடைசூழ
சட்டசபையில் புதிய சட்டம்
ஒன்றின் அரங்கேற்றம்
செவிடர்கள் கை தட்டினர்
ஊமைகள் ஆதரித்து
கை தூக்கினர்
குருடர்கள் அதில்
கைச்சாத்திட்டனர்
எம் முதுகில் அது
ஏற்றப்பட்டது
முதுகெலும்பில்லாத நாம்
அதை சுமக்கின்றோம்

(சுடர்ஒளி - 05 . 12 . 2012)

## தீக்குச்சி



தீபத்தை ஏற்றித்தான்
சிறு தீக்குச்சி அணைகிறது
இங்கு பல தீபங்கள் அணைந்தனவே
எத்தனை தீக்குச்சிகள் அதில்
பற்றிக் கொண்டன
பற்றிக் கொண்டவைகூட
மூடிவைத்த குடத்தினுள் அல்லவா
எரிகின்றன ஊமையாக


(சுடர்ஒளி - 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநாதைப் பிணங்கள்

உயிர்பிரிந்து நாளாச்சு
ஓடிய குருதியும் உறைந்தாச்சு
மழையில் முழுதும் நனைந்தாச்சு
வெயிலும் நன்கு சுட்டாச்சு
உடல் உருக்குலைந்து போயாச்சு



முகம் பார்க்க முடியவில்லை
முகவரியும் தெரியவில்லை
தூக்கிச்செல்ல நாதியில்லை
உறவுகள் தெரிந்திட வழியுமில்லை

வேட்டுக்கள் ஓய்ந்தபின்னே
துர்நாற்றம் காற்றில் கலந்தபின்னே
அழுகி உடல் அழியுமுன்னே
வேட்கையோடு வேட்டைக்கார
கூட்டம் பிணத்தின் முன்னே

பிரிந்துபோன ஆன்மாவை நினைந்து
துக்கத்தை தன் நிறத்தில் புனைந்து
விருந்தளிக்கும் இறைவனையும் நினைந்து
கரைகிறது காகக்கூட்டம் இணைந்து

காணாமல்போன எஜமானை எண்ணி
காத்திருந்த நாய் பல நாளாய் பட்டினி
ஊனுருகி உண்டிசுருங்கி உணவையெண்ணி
பிணத்தருகே காத்திருக்கு
குடலேனும் கிடைக்குமென்றெண்ணி
மீதமிருந்தால் அதையுண்ணும் நுண்ணுண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றி என்பது இவற்றில் எ[ஏ]து?

வெற்றிக்களிப்பில் தப்பித்திரியும்
போர்க் குற்றவாளிகளே!
நீங்கள் பெற்ற வெற்றிதான் என்ன?
ஆயிரம் அனாதைச் சிறுவர்களை
வடக்குக்கிழக்கில் அலையவிட்டதா?
விதம்விதமாய் கொலைபுரிந்து
நம் தேசத்தில்
விதவைகளை விதைத்ததா?
வகைதொகையாய் கொன்றொழித்து
மண்ணுள் புதைத்து அதன்மேல்
காப்பெற் வீதிபோட்டதா?
முகாம்களின் முன்னால்
விகாரைகள் முளைத்ததுபோல்
முகாம்களின் பின்னால்
புதைகுழிகள் விளைந்ததா?
நிராயுதபாணியாய் நின்றபெண்களில்
உந்தன் வீரத்தைக்காட்டியதா?
குருதியோடிய நம் நீரோடையில்
தென்புலத்தான் மீன்பிடிப்பதா?
உறவுகள் உடல்சிதறி உயிர்துறந்த
இடத்தையெல்லாம்
சுற்றுலாத்தலமாக்கி நம் வலிகளை
வேடிக்கைப் பொருளாக்கியதா?
குற்றுயிராய்த் துடித்ததையும்
குருதியில் நாம் குளித்ததையும்
முட்கம்பிவேலிக்குள் முடக்கப்பட்டதையும்
உலகமே வேடிக்கைபார்க்கவைத்ததா?
காணாமல்போனோர் பட்டியலை
ஏ9 வீதிபோல் நீட்டியதா?
முல்லையில் இருந்த முள்ளிவாய்க்காலெனும்
குருசேஷ்திரத்தை
ஐநா சபையில் உலகறியச் செய்ததா?
இவற்றில் எதுதான் நீர்கண்ட வெற்றி?




(உதயன் - 18 . 10 . 2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றதும் பறிபோனதும்



தென்புலத்து அங்காடிகள் வந்தது
அன்றாட வருமானம்
அன்றோடு நின்றது
கதவுகள் திறக்கப்பட்டன
இதயங்கள் பூட்டப்பட்டன
பாதைகள் நீண்டன
பாதங்களில் லாடம்
அடிக்கப்பட்டது
மீள்குடியேற்றம் நடந்தது
பரம்பரை நிலங்கள்
அரசுடமையானது
மாடிகள் எழுந்தன
குடிசைகள் தீவைக்கப்பட்டன
தலைப்பாகை சூட்டப்பட்டது
தாய்க்குலங்களின் தாவணிகள்
பறிக்கப்பட்டன
தலைமீது பூக்கள் தூவப்பட்டன
ஆணிவேர் அறுக்கப்பட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கலைநிகழ்வுகள் மேடையேறியன
கலாசாரம் மேடைக்கடியில்
புதைக்கப்பட்டது
வீதிகளில் விளக்குகள் எரிந்தன
பார்வைகள் பறிக்கப்பட்டன
உறவுகள் இணைந்தது
உணர்வுகள் சிறைவைக்கப்பட்டன
கழுத்தில் மாலைகள் குவிந்தன
கல்லறைகளோடு மலர்வளையங்களும்
நிறைந்தன
வீதிகள் தாரை வார்த்து புதிதானது
வீதியின் பெயரும் தாரைவார்த்து
கொடுக்கப்பட்டது
ஆலயங்களில் உண்டியல்
நிறைந்தது
ஆலய விதிமுறைகள்
விதிவிலக்காய் போனது
விடுதிகள் விரைவில்
நிறைந்து போனது
விபச்சார தொழிலும்
வருமானம் கண்டது
பூத்துக் குலுங்கிடப்
பூச்சாடிகள் வந்தன
இப் புவிதனில் இருந்த
மூலிகைகள் அழிந்தன
கல்விச்சாலைகள்
கட்டடம் பெற்றன
பாடப் புத்தகம்
நம் வரலாற்றை மறந்தது
பெற்றதைவிட
பறிபோனதே அதிகம்
என்பதை நீ உணர்வாயா?

(உதயன் - 19 . 05 . 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வையாளர்களாய்..



இரவுபகலாய் கண்விழித்து
கால் கடுக்க காவல்காத்த
ஐந்தறிவு நாயொன்று
வீதியில் கண்கெட்டவாகனத்தில்
மோதுண்டுகிடக்கிறது
இறுதி மூச்சைவாங்கிக்கொண்டு
கண்களில் மட்டும் இன்னும்
ஜீவன் நிழலாட
தெருவில் திரியும் மனிதர்களை
ஏக்கத்தோடு பார்க்கிறது
மனிதப் பார்வைகளும்
நாய்மீது பட்டும்படாமலும்
பட்டென்று திரும்பியது
பாவம் அந்தநாய்
குற்றுயிராய் தெருவில் கிடந்த
மனித உடல்களையே
வேடிக்கை பார்த்துச்சென்று
பார்வையாளர்களாகவே பழக்கப்பட்ட
வெட்கங்கெட்ட பிறவிகள்
இந்த மனிதகுலம் என்பது புரியாத
அந்த நன்றியுள்ள ஜீவன்
இறுதிவரை மனிதனை நம்பியே
தெருவோரம் உயிர் துறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிழாக் கோலம்

திருவிழாக் காலமதில்
நீலம் பச்சைகொடி பறக்கும்
வண்ணம் பு'சிய மதில்கள்கூட
கைகூப்பி வணக்கம் சொல்லும்
மின்சாரமில்லா ஊரிலும்
ஒலிபெருக்கி கதறும்
தாரில்லா வீதியிலும்
புதுரக வாகனங்கள் புழுதி கிளப்பும்
திறப்பு விழாக் காட்சிகளும்
மலிந்து கிடக்கும்
பிரச்சாரப் பிரதிகளும்
வீட்டை நிரப்பும்
தெற்குத்திசைக் காற்றும்
வடக்கே சுழன்றுவீசும்
திருவிழா முடிந்ததும்
காகிதக் குப்பைகள்
தெருவில் குவிந்திருக்கும்
கட்டாக்காலி மாடுகள் அதைமேயும்
அள்ளித் தெளித்த வாக்குறுதியும்
அதற்கு இரையாகும்
மின்கம்பத்தில் தொங்கும்
பதாகைகள் மட்டும்
இன்னமும் கைகூப்பும்
பொது மன்னிப்புக்கேட்டு



(உதயன் - 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இல்லா வாழ்வு

அன்பில்லா வாழ்வது
அலையில்லா கடல் போன்றது

உணர்வில்லா உறவது
உப்பில்லா உணவு போன்றது

நினைவில்லா மனமது
நிறமில்லா வானம் போன்றது

அறமில்லா உழைப்பது
அர்த்தமில்லா சொல் போன்றது



பண்பில்லா வாழ்வது
படியில்லா வீடு போன்றது

துணிவில்லாப் பயணமது
துடுப்பில்லா ஓடம் போன்றது

பணிவில்லாப் பதவியது
பற்றில்லா மரம்போன்றது

கொடையில்லா செல்வமது
கொடியில்லாக் கம்பம் போன்றது

கனிவில்லா கடமையது
கருவில்லாக் கவிதை போன்றது

தன்னடக்கமில்லா தலைமை
தண்டில்லா மலர்போன்றது

நம்பிக்கையில்லா நட்பது
நடுக்குளத்தில் தாமரை இலைபோன்றது

உழைப்பில்லா உணவது
உடுப்பில்லா உடல் போன்றது


தோல்வியில்லா வெற்றியது
தோலில்லா மேளம்போன்றது

(சுடர்ஒளி - 12 . 08 . 2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேருந்துப் பயணத்தில்



அதிகாலை அலாரம் வைத்து
அரைவயிற்றை நிறைத்த பின்பு
ஓடோடி வீதிவந்து
பயணிகளால் முட்டிவழியும் பேருந்தை
கைநீட்டி இடைமறித்து
ஒற்றைக்கால் பேருந்தின் படிமிதிக்க
மற்றக்கால் பதிக்கும் முன்னே
பட்டென்று புறப்படும் பேருந்து

ஆவணமும் ஆடையும் நிறைந்த
பயணப்பை ஒரு கையில் கனக்க
மறு கை கெட்டியாய் பிடிப்பதில்தான்
உயிர் உடம்பில் ஒட்டியிருக்கும்
ஆரம்பத்தில் ஏறியவர்கள் ஆசனத்தில் அமர்ந்திருக்க
பிந்தி ஏறியவர்கள் பிணைந்து நின்றிருக்க
நடத்துநர் திட்டுற திட்டில்
ஆணென்ன பெண்னென்ன இளமென்ன கிழமென்ன
அதிகாரியாய் இருந்தாலும் அடங்கித்தான்
போகவேண்டும்

முட்டிமோதி மிதிபட்டு நின்றாலும்
மூச்சுவிட இடமிருந்தாலே போதுமென்ற நிலை
பாதியில் துயில் குலைந்தெழுந்தால்
மீதித் தூக்கம் என்னசெய்யும்?
இருப்பவர்கள் யன்னலை இறுக மூடி
தலையணையாய் எண்ணிக் கண்ணயர்வர்
முகம் திருப்ப இடமில்லை ஆனாலும்
சிலர் முகநூலில் முகம் புதைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாட்டு நண்பரின் படத்துக்கு
ஒரு லைக்பண்ணி பின்பு
தம் புகைப்படத்தையெடுத்து தாமே ரசிப்பர்

தொலைபேசி அடிக்கடி சிணுசிணுக்க
அதை எடுக்க முயல்கையில் முழங்கை
மற்றவரை பதம் பார்க்கும்
புன்னகையால் சமாளித்து வெளியெடுத்து
ஹலோ.... என்று காதில் வைத்தால்
பயணம் முடிந்தாலும் முடியாது
அவர்களின் அரட்டையடிப்பு

முண்டியடித்து முன்பாதையால் இறங்க முயன்றால்
சாரதி கண்ணாடி மறைக்குதென்று
கண்டபடி திட்டுவார்
பின்பாதையால் இறங்கப் போனால்
செகிடுகளுக்குச் சொன்னனான்
பெல் வேலை செய்யாதென்று
நடத்துனர் திட்டுவார்
முழத்திற்கு ஒரு ஆலயமமைக்கும்
தொண்டர்கள் சிலர் ஏறி
வில்லங்கமாய் திருநீறு தந்து
உண்டியலை நீட்டுவர் முகத்தின் முன்னே
பாதிப்பேர் முகம் திருப்ப
மீதிப்பேர் பாரமாய் கிடக்கும்
சில்லறையைக் கொடுக்க
விடைபெறுவார் இறைதொண்டன்
அடுத்த பேருந்தில் வசூலிக்க

இத்தனைக்குப் பின்புதான்
அலுவலகம் அருகில் வரும்
இடிபட்டு இறங்கும்முன்னே
நகரத் தொடங்கும் பேருந்து
பாவம் இனி அடுத்தபயணிகள்.....

(உதயன் - புரட்டாதி, 2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீயிடைவிழுந்த விதை



ஆலம் விதையொன்று
அக்கினிக் குழம்பில்
விழுந்தது

தந்தைமரமன்று
நமெக்கெல்லாம் நிழற்குடை
அண்ணனுமன்று விதையாகிப்போனான்

பாலா என்ற சந்திரன்
இருள் சூழ்ந்த நம்மினத்தின்
விடிவெள்ளி ஆகிடுமோ!

என்றெண்ணித் துளைத்தது
தோட்டா அவன் பிஞ்சுமார்பில்
வீணாய் வடிந்தது வீரக்குருதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசத்தின் வேலியாய்
காத்திட்ட கொள்கைக் கொடியின்
இறுதிவிதை இவனன்றோ!

காக்கவேண்டிய கரங்களே
காட்டிக்கொடுத்து அமைச்சரவையின்
கதிரையிலமர்ந்ததோ!

வேள்விக்காய் வளர்த்த
குட்டி ஆட்டைப்போல்
உணவூட்டி உயிர்பறித்தது

போர் விதிமுறையறியா
காடையர் கூட்டத்தின்
கட்டவிழ்ந்த கொடூரம்

ஒளியை நம்பி
ஓடிவந்த விட்டில் பூச்சி
சுட்டிறந்துபோனது

அதுவிழுந்து இறக்கையில்
இறகு பட்டதால்
மனிதநேயச் சுவாலை அணைந்தது
உலகம் இருண்டது

காலத்தின் விதியென்றும்
காலனின் சதியென்றும்
கண்மூடிக் காத்திருப்போம்
கண்ணீர் வற்றும்வரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதி வழியில் நீதி காத்திருக்கும்



உன்னை நீ மறைப்பதற்காய்
இடம் ஏதும் இல்லாமல்
கண்ணாடிக் கூட்டிற்குள் ஒளிகின்றாய்
அங்கு உன் விம்பம்
பலமடங்காய் தெரிகிறதே

பிறர் விட்ட கண்ணீரை மறைப்பதற்காய்
தண்ணீரில் அவர் முகம் புதைத்தாய்
கன்னத்தின் ஓரத்தில் கண்ணீர்த்துளிகள்
உப்பாய் உவர்க்கிறதே

உன் பாவம் போக்கிடவே
புனித நீரில் உடல் நனைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற மதத்திலும் யாத்திரை செய்தாய்
மனதின் அழுக்கு
உன் செயலில் தெரிகிறதே

கறைபடிந்த கரம் மறைக்க
பணம் அள்ளி இறைத்தாய்
உன் கறை படிந்த பணம் இன்று
ஊரெல்லாம் முரசு கொட்டி உலாவுகிறதே
கண்மூடித்தூங்கும் கல்லறைகளின்
மகிமை புரியாக் கல்நெஞ்சுக்காரனாய்
அதன்மேல் கல்லெறிந்து கலைத்தாயே
நீ கருவறையில் உதித்தவனா?

பாவத்தின் ஆதார எச்சங்களை
எண்ணெய் ஊற்றி எரித்தாயே அது
தூய வாயுமண்டலத்தில் வானுயர
நீ பாவியென ஆவியாய்ப் பரவுகிறதே

முட்கள் நடக்கும் பாதைதனில்
பூக்களைச் சொரிந்தவர்களே
மௌனித்து மரணங்களை ஆமோதித்த
ஆதிக்கவான்களே!

கருவறை தொடங்கி கல்லறை செல்லும்
உந்தன் வாழ்க்கைப் பயணத்தில்
பாதி வழியில் நீதி காத்திருக்கும்

அதையும் நாம் பாத்திருப்போம்
அதுவரை இன்று காத்திருப்போம்.

(சுடர்ஒளி - 26 . 12 . 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைபணி எ(ஏ)து ?



கடல் கடந்து வந்த
பாதங்களை ஆறவிட
சமுத்திரங்கள் கடந்துவந்த
சிறகுகள் ஓய்வெடுக்க
சிறு குடில்கள் ஏதுமில்லை

கோபுரங்கள் வானுயர
புறாக்கள் எச்சமிட்டு கூடுகட்ட
ஆலயங்கள் அமைத்ததனால்
பயன் ஏதுமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினியால் தாய் தவிக்க
பாலின்றி பாலகன் பரிதவிக்க
அடுத்த பொழுதில் உயிரிருக்க
உணவென்று ஏதுமில்லை

அன்னதானம் தினமும் இட்டு
பால் அபிசேகம் செய்து
பரமனுக்கு பழம் கொடுத்து
பயன் ஏதுமில்லை
ஒட்டிய உடல் மறைக்க
ஒட்டுத்துணி ஒன்றுமில்லை
கட்டிய துண்டுச் சேலையிலும்
சாயங்கள் ஏதுமில்லை

பட்டுத்துணி சாத்தி
வட்டக்குடை பிடித்து
வாகனத்தில் வலம்வந்தும்
பயன் ஏதுமில்லை

தெய்வத்தின் குழந்தைகள்
துன்பித்த வேளையிலே
உன் இறைபணியை ஏற்குமா?
பிறவுயிரை உன்னுயிராய் நேசி
என்றுரைத்த இறைவன்

இந்துவாய் நானிருந்து
இதையெடுத்துரைத்தால்
நாத்திகன் நீ என்பர்
ஆகமம் புரியாதோர்.

(உதயன் - 07 . 07 . 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்ணுக்குள் புதையுண்ட புனிதர்கள்



வானுயர் மலை அழகும்
மலைமுகடு முகில் முட்டி
மழை சொரியும் மண்மேடும்
அருவிகளின் ஆரவாரமும்
பச்சைப் பசேலென்று விரிந்துகிடக்கும்
தேயிலைத் தோட்டமும்
இலங்கைத் தீவின் அழகியமேடு

ஆயினும் என்ன
அந்த அழகிய அடிவாரத்தில்
வாழ்கின்ற மக்கள்மட்டும்
என்றும் ஏழைகளாய் அடிமைகளாய்
லயன்களிலே அடைக்கப்பட்டுக் கிடக்கின்றனர்
மலைஉச்சியின் அழகை ரசித்த
அதிகார அரசியலுக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிவார மக்களின் அழுகுரல்கள்
நீண்டகாலமாகக் கேட்கவில்லை
ஓயாமல் கொழுந்து பறித்தகைகள்
இன்றுமார்தட்டி அழுகிறது
ஆயிரம் கரங்கள் உதவிக்கரம் நீட்டினாலும்
மண்ணில் மாண்டவர் மீண்டிடுவாரோ?

நிவாரணத்தால் எதையும் ஈடுசெய்யும்
பிற்போக்குச்சிந்தனைகள்
என்றுதான் எம் மண்ணைவிட்டகலும்
இனி மலைமுகடுகளில் முட்டும்
முகில்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கட்டும்
நீர்வீழ்ச்சிகள் நிதமும்
முகாரிராகம் பாடட்டும்

இதுவரைகாலமும் கண்ணுக்குப் புலப்படாத
கூலிகளாய் கூரைகளின்கீழ் வாழ்ந்தசமூகம்
மண்மூடிப் போனபின்பு மண்தோண்டி
பிணங்களைத்தேடுகிறது மாபெரும் கூட்டம்

அந்நியச்செலாவணிக்காய்
உழைத்து உழைத்தே
அந்நியப்பட்டுப்போன அந்த ஆத்மாக்களின்
அழுகுரல்கள் ஒவ்வொருவர் செவியிலும்
ஒலித்துக் கொண்டுதான் இருக்கும்
மானிடப் பிறவிகள் நாம் மட்டுமல்ல
அந்தக் கடவுளும் இங்கே குற்றவாளிதான்.

(உதயன் - 15 . 01 . 2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் கேள்விக்கு பதில்



கனவில் ஒருநாள் கடவுளைக் கண்டேன்
மனதில் தோன்றியகேள்விகள் கேட்டேன்

மனிதன் என்பவன் யார் எனச் சொல்வீர்
பேசத்தெரிந்த ஓர் விலங்கே என்றார்

பொன்நகை எதுவென பொதுவாய் சொல்வீர்
ஏழ்மையில் புன்னகை வேறெது என்றார்

பாவம் எதுவென்று பணிவாய்ச் சொல்வீர்
இயற்கையின் பாதையில் விலகுதல் என்றார்

செல்வம் எதுவென்று செவியோரம் சொல்வீர்
ஏழைகளுடன் செலவளித்த நேரம் என்றார்

வெற்றி எதுவென வெடுக்கெனச் சொல்வீர்
விழுந்தபோதெல்லாம் எழுவது என்றார்

உறவெது என்று உணர்த்தி நீர் சொல்வீர்
உயிர்விடும்போது அது உருகிடும் என்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாசத்தின் உருவத்தை பதமாய் சொல்வீர்
வேசம் இல்லாத அன்னையே என்றார்

குழப்பக்கூடாதது எதுவெனச் சொல்வீர்
குழந்தையின் தூக்கம் அதுவெனச் சொன்னார்

பதவி எதுவென பகிடியாய்ச் சொல்வீர்
தன்னலமில்லா கடமையின் பரிசது என்றார்

சுவையான உணவெது நாவூறச் சொல்வீர்
பட்டினி போக்க கிடைப்பவை என்றார்
கடவுளின் வெற்றி எதிலெனச் சொல்வீர்
பூலோகத்தில் மனிதனைப் படைத்தது என்றார்

கடவுள் தோற்றது எதிலெனச் சொல்வீர்
மனிதன் படைத்த பணத்தினில் என்றார்

ரசித்துப் பார்த்தது எதுவெனச் சொல்வீர்
பாறையில் சிந்தும் அருவியை என்றார்

வெறுத்துப் பார்த்தது எதுவெனச் சொல்வீர்
வன்முறையில் சிந்தும் குருதியை என்றார்

சோதிக்க நினைப்பது எதையெனச் சொல்வீர்
சாதிக்கத் துடிக்கும் மனிதரை என்றார்

சவாலாய் இருப்பது எதுவெனச் சொல்வீர்
துப்பாக்கியைத் தினமும் தூங்கவைப்பது என்றார்.


சாதிக்க நினைப்பது எதுவெனச் சொல்வீர்
பூமியை அன்பால் நிரப்புதல் என்றார்

(சுடர்ஒளி - 30 . 10 . 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்டு போன வாழ்வு



ஒற்றையடிப் பாதையிலே
சருகுகளின் சங்கமம்
ஒருவழியும் புரியலையே

நிழல் தந்த வேம்பும்
தீபட்டு கருகியதால்
நிழலையும் நெருப்பாக சொரிகிறது

முற்றத்து மல்லிகையும் வாடித்
தேன் சொட்ட மறுத்து
கண்ணீர் வடிக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடிருந்த அடையாளமாய்
விட்டுவைத்த நிலையொன்றில்
கறையான் குடியிருப்பு

புண்பட்ட மூங்கிலும்
புயல் காற்று வீசுகையில்
முகாரி ராகம் இசைக்கிறது

வாழையடி வாழையாய் வாழ்ந்த
நம் வம்சத்தின் வாரிசாய்
கிளிசல்களோடு ஒரு வாழைமரம்

உயர்ந்துநின்ற இப்பிலிப்பில்
கொட்டிய விதைகள் மீட்டிடும்
அதை அட்டையில் ஒட்டியஞாபகத்தை

தரைதொட்ட மழைத்துளியும்
தரைபுரண்டு ஓடுகையில் நிலம்குடித்த
குருதியோடு குடிகொண்டு ஓடுகிறது

நெல் விதைத்தவயல் நிலமும்
செல்லரித்துப் போனதனால்
புதைநிலமாய் புதையுண்டு போனது

தொலைதூரம் போனதனால்
தொலைந்துபோன முகவரிகள்
தொகைவகையாய் வடக்கிலுண்டு

மீண்டுவந்த நாட்களிலும்
மீளாத நினைவுகளும்
மாண்டுபோன வாழ்வும் மீண்டிடுமா.

(சுடர்ஒளி - 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழையின் வீராப்பு

பூவிதழ்கள்மீதா இந்த
பாதணிகளின் அணிவகுப்பு
மற்றவர் மண்ணிலா
காலனித்துவ குவிப்பு
விளைநிலங்களிலா
பிணங்களின் விதைப்பு
நீரற்று வாடிய கதிர்களிலா
அதிகாரவாள்களின் அறுப்பு
இருண்ட இந்த தேசத்திலா
இனவாதநெருப்பு
புனிதத்தலங்களிலா
மதவாத வெறுப்பு
பட்டாம்பூச்சிக்கா
இத்தனை படையெடுப்பு
மனிதக் குருதியைக் குடிப்பதில்
யாருக்கிங்கே விருப்பு
காலம் காலமாய் நாம்
மாற்றான்காலடிச் செருப்பு
நாளையேனும் விலகுமா
உரிமையின் மறுப்பு
என்றுதான் துலங்கிடும்
அவர்களின்பொறுப்பு
எப்போது நிகழ்ந்திடும் பூட்டிய
மனக்கதவதின் உடைப்பு




(உதயன் - 14 . 09 . 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி புதைகுழிகளும் வாய் திறக்கும்



மறைந்துபோன உயிர்களோடு
அன்று சாட்சிகளும்
மறைந்துபோயிற்று
புதைந்துபோன உடல்களோடு
அன்று உண்மைகளும்
புதைந்து போயிற்று
காணாமல் போனோரோடு
அன்று குற்றப்பத்திரிகையும்
காணாமல் போயிற்று
சுதந்திரநாடென்று
சுடுகாட்டைக் காட்டினர்
எதிர்த்தவரையெல்லாம்
மண்ணுக்குள் புதைத்தனர்
வால்பிடித்தவர் எல்லாம்
பல்லக்கில் சென்றனர்
வெள்ளைத்தாளில்
உண்மையை எழுதியவர்களை
வெள்ளைவானுக்கு இரையாக்கினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதைகுழிகளோடு கதறல்களும்
அவர்களின் கனவுகளும் அடங்கிப்போனது
நீதிதேவதையும் கைகட்டப்பட்டாள்
உலகமே எதிர்த்தது இந்த அராஜக அரசை
சந்தர்ப்பம் கிடைத்தது தமிழர்கள் கையில்
வாக்காளர் வழங்கினர் நல்லதொரு தீர்ப்பு

உறங்கிக் கிடந்த உண்மைகள் யாவும்
உயிர்பெறத் தொடங்கிவிட்டன
மூடிவைத்த விசாரணைகள்
விஸ்வரூபம் எடுக்கிறது
சட்டம் தன் இருப்பிடம் திரும்புகிறது
வெந்தணல் நம் கண்ணீரில் அணைகிறது
காத்திருந்த நீதி கதவைத்தட்டுகிறது

தமிழர் நமக்கு கிடைப்பதுதான் என்ன?
இழந்தவை யாவும் இழந்தவைதானே
இருந்தும் நீதி நிலைத்திட வேண்டும்
ஒருவரின் கொலைக்கு ஒருசிலர் சாட்சி
விசாரணையும் விரைவில் ஆரம்பம்
பல்லாயிரம் கொலைகளுக்கு உலகமே சாட்சி
ஆனாலும் இங்கே விசாரணைகள் இல்லை

நாமெல்லாம் வாயிருந்தும் ஊமையாகி
யுகங்கள் பலகடந்து வந்துவிட்டோம்
விசாரணையிலும் நாம் சிறுபான்மையினர்
ஒதுக்கியநிதியிலும் மட்டுமல்ல
நீதியிலும் நாம் புறம் தள்ளப்பட்டோம்
தனக்கான நீதியைதானே தேடிக்கொள்ள
இனி புதைகுழிகளும் வாய்திறக்கும்

(சுடர்ஒளி - 27 . 12 . 2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிக்க மறந்த முகங்கள்

சிறகடித்துப் பறந்த எங்கள்
சிறகுகள் ஒடிக்கப்பட்டு
சிறைவைக்கப்பட்ட பின்பு

உறவுகள் பிரிந்துஎங்கள்
உணர்வுகள் அடக்கப்பட்டு
நாம் உறங்கிப் போனபின்பு

கனவுகள் சுமந்த எங்கள்
கருவறை அறுக்கப்பட்டு
உருக்குலைந்து போனபின்பு

ஊரோடு வாழ்ந்த எங்கள்
உரிமைகள் பறிக்கப்பட்டு
அனாதரவாய் போனபின்பு

சீர்மிகுசீராளர் எங்கள்
சிந்தைகள் சிதைக்கப்பட்டு
சீரழிந்து போனபின்பு

சிகரமாய் வாழ்ந்த எங்கள்
புகழ் மண்ணில் வீசப்பட்டு
புதையுண்டு போனபின்பு

சிரிக்கச்சொல்லிக் கேட்கிறது
இந்த விந்தை உலகம்
இனி எப்படிச் சிரிக்கும்
இந்த சிரிக்க மறந்த முகங்கள்.



(உதயன் - 21 . 07 . 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## கற்றுக் கொண்ட பாடம்

குயில் கூவிமுட்டை இட்டாலும்
காக்கையின் கூடு சொந்தமாகுமா?
அதன் குஞ்சை காக்கை ஏற்குமா?

கடலலைகள் கரைவந்து போவதால்
அதில் வாழும் மீன்கள் தரைவாழுமா?
தரை உயிரிகள் அதை ஏற்குமா?

பனைமரத்தில் வாழும் ஊர்க்கிளிகள்
பொற்கூடு கிடைப்பதால் ஆலமரத்தில்
ஆர்ப்பரித்து வாழ்ந்திடுமா?

கொண்டைச் சேவல் கூரைமீது ஏறி
எட்டுத் திசையும் கூவி சிறகடித்தாலும்
வானுயரப் பறக்கமுடியுமா?



ஆயிரம் முட்டை இட்ட ஆமை
அமைதியாய் போகையிலே
ஒருமுட்டை இட்டகோழி
ஊர் கூட்டி கொக்கரிக்கலாமா?

மாடமாளிகைகள் கிடைப்பதால்
மார் தட்டும் மானமுள்ள மனிதனின்
மண்வீட்டை விலைபேசமுடியுமா?

கற்றுக்கொண்டபாடத்தின்
தத்துவம் இதுவென்று புரிகிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வஞ்சனை

வரமாய் சிறகெடுத்து நீ
வானுயரப் பறந்திட சிலுவை
சுமந்தவர்கள் எத்தனைபேர்?

ரோஜாவைப் பறித்து நீ
கழுத்தில் மாலையிட முள்மீது
நடந்தவர்கள் எத்தனைபேர்?

முண்டியடித்தோடி நீ
பதவி வென்றிட உனக்காய்
மிதிபட்டோர் எத்தனைபேர்?

உன் படத்தை நீ
மாட்டிவைக்க தன்முதுகில்
ஆணியடித்தோர் எத்தனைபேர்?

மேடையேறி மைக்பிடித்து நீ
உன்புகழ் முழங்க மூச்சை
விட்டவர் எத்தனைபேர்?

அத்தனைபேரும் இங்கே
கழுமரத்தில்
நீயோ அங்கு பல்லக்கில்



(உதயன் - 05 . 01 . 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலனும் கண்ணீர் விட்டான்



தூரத்துச் சொந்தம் ஒன்று
உயிர் பிரிந்து போகையிலும்
தொலைதூரமாய் இருந்தாலும்
ஒப்பாரி வைத்த நாங்கள்
தொப்புட்கொடி உறவு
கொலையுண்டு போகையிலும்
நாவடக்கி அழுத காலம்

கடலில் கரையவேண்டிய அஸ்த்தியும்
கண்ணீரில் கரைந்த காலம்
மீன்களுக்கு பிண்டமிட்ட வம்சம்
பிணங்களை காக்கைக்கும் நாய்க்கும்
இரையாய் கொடுத்த காலம்

மார் முட்டி பாலுண்ட குழந்தையும்
பல் விழுந்த பாட்டியும்
செல் விழுந்துமாண்ட காலம்
படுக்கையே பாடையாய்
மாறிய காலம்

சுடுகாடும் குடில்கொண்டு
வதிவிடமாய்ப் போக
வீட்டுமுற்றங்கள் இடுகாடாய்
இடம்மாறிப் போன காலம்

இந்தக் காலக் கனதிகண்டு
காலனும் களம் விட்டுப்போனான்
கண்ணீர் விட்டபடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனங்களை வெல்லும் மரங்கள்



மரணத்தின்பொழுதும் விதைதனைத்தூவி
தன் புதைநிலம்தன்னை விதைநிலமாக்கி
தோப்புகளாக்கும் தோற்றுவாய் மரங்கள்

பறவைகள்கூடி தன்விரல்களை ஒடித்து
கூடுகள் அமைக்கத் தன் மடிதனைக்கொடுத்து
மன்னித்து மகிழ்ந்திடும் மரங்கள்

விண்வரையுயர்ந்து முகில்களைத்திரட்டி
மழைதனைப்பொழிந்து வையம்செழித்திட
வைத்திடும் வரங்களே மரங்கள்

தன்னையே மேயந்திடும் கால்நடை வரினும்
தன்னையே தறித்திடும் மானிடர் வரினும்
நிழல் தனைக் கொடுத்திருக்கும் நிகரற்ற மரங்கள்

பச்சிலைதனிலே பச்சையம்தரித்து
சூரியவொளியுடன் இச்சைகள்கொண்டு
ஒட்சிசன் படைத்த படைப்பாளியே மரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகப்பந்தை உதிர்ந்துபோகாமல்
வேர்கள்கொண்டு இறுகப்பிடித்திருப்பது
மண்பற்றாளர்களாய் நிற்கும் மரங்கள்

இலையுதிர்கையில் மண்ணிலுரமாகவும்
தானேவிழுகையில் தூணாகநிற்கும்
தற்கொடையாளியே மரங்கள்

பூஜைக்கும் பூங்குழலுக்கும் பூச்சொரிந்து
பறவைக்கும் பகுத்தறிவாளருக்கும் பழம்கொடுத்து
விருந்தோம்பல் செய்யும் மரங்கள்

பிறப்பிற்கு தொட்டிலாய் தாலாட்டி
இறப்பிற்கு சுடுகாட்டில் விறகாகி
ஆதிமுதலந்தமாய் ஆண்டுநிற்கும் மரங்கள்

வெட்டிப்பார் வேர்தளைக்கும் புதுமரமாய்
எரித்துப்பார் அதன் சாம்பலிலே
நெல்லை ஒற்றையாய் விதைத்துப்பார்
கற்றையாய் கொடுக்கும் அரிசிமுத்துக்களை

சுட்டுப்போட்டாலும் விட்டுப்போகாது
மரம்மீது நமக்குள்ளவுறவு
அதனால் கிடைப்பதெல்லாமே வரவு
இனி இதுதானெங்கள் மரபு

புத்தனுக்கு போதித்ததொரு போதிமரம்
நீ நட்டுவைத்தால் நாணற்புல்லும் போதிக்கும்
உன் எதிர்கால சந்ததிக்கு
இதுவே உன் சிந்தனைக்கு...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபுலத்துச் சின்னம்

தழை(ல) இழந்துபோனதனால்
தலைசாய்ந்து போய்விடுமோ
வடபுலத்து பனைமரங்கள்

மண் பற்றில் ஊன்றிநிற்கும்
நடு வைரம்பாய்ந்த மரம்
நடுங்கிடுமோ புயல் காற்றில்

புல்பூண்டு பற்றைக்குத்தான்
விளம்பரங்கள் தேவைப்படும்
வானுயர்ந்த உனக்கு அது எதற்கு?

நெடுநெடென்று வளர்ந்ததனால்
துளைகொண்ட பப்பாமரமும்
பனைமரமாய் நின்றிடுமோ

நிதம் பலர் தாவ உனக்கு
கிளையென்று ஏதும் இல்லை
கொள்கையில் நில் நேராய்

நீ வடபுலத்துச் சின்னம்
நிதம் வளர்ந்தவண்ணம்
நிலைத்து நிற்பது திண்ணம்.



(சுடர்ஒளி - 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாரியின் அலங்காரம்..



கார்மேகக் கூட்டத்தின்
கும்மிப்பாட்டும்
இருண்ட வானத்தின்
மின்னல் ஒளியும்
இலை இழந்த கிளையின்
துளிர்ப்பும்
தரிசான தரையின்
புல் விரிப்பும்
வற்றிய குளங்களின்
நிறை நீரும்
வறண்ட வயலின்
செறி நெல்லும்
நிறமிழந்த வானின்
வானவில்லும்
நாவறண்ட தவளைகளின்
ரீங்காரமும்
மாரிகாலத்தின் மகத்தான
அலங்காரம்

(வலம்புரி - 18 . 12 . 2012)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆராய்ச்சியின் பிடியில் இயற்கை

மனிதா!
மரங்களின் இலைகளை ரசி
மலர்களை நுகர், கனிகளைப் புசி
ஆணிவேரின் ஆழத்தை மட்டும் தேடாதே
அதுபூமியின் பசுமையை அழித்துவிடும்.

கடலின் பரப்பைப் பார்
அலையின் நுரையில் கால் நனை
மீன்களின் வகைகள் தேடு
கடலடியில் அணுப்பரிசோதனைமட்டும்
வேண்டாம்
அலையின் சீற்றம் உன்னை அழித்துவிடும்



நீண்ட நீல வானத்தை ரசி
வானவில்லின் வர்ணத்தை கண்டுகளி
நிலவொளியில் நின்றுபார்
உன் கண்டுபிடிப்பின் நச்சுவாயுவை
வளிமண்டலத்தில் கலக்காதே
சூரியவெப்பம் உன்னை அழித்துவிடும்

வேற்றுகிரகம் செல்
நீர் உண்டா நிலமுண்டா தேடு
மரம் உண்டா? மனித இனம் உண்டா? தேடு
ஆனால் அங்காவது சமாதானக் கொடியை
பறக்கவிடு


உன் ஆராய்ச்சி நல்லது ஆனால்
அவை புதுமையை தேடட்டும்
இயற்கையை சிதைக்க வேண்டாம்
ஆக்கட்டும் அழிக்க வேண்டாம்.

(உதயன் - 14 . 10 . 2012)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையின் மனித குணம்



வானம் இடியிடிக்க பாரபட்சமின்றி
கார்மேகம் மழை பொழியும்
நம் பூமி செழித்தோங்க
இது தன்னலமில்லா கொடையின் வடிவம்

வெண்ணிற நுரையலைகள்
இடைவிடாது கரைதட்டி மோதும்
இது தலை நரைத்தபோதும்
மனம் தளரா முயற்சியின் வடிவம்

ஒற்றையாய் விதைத்த நெல்
கற்றையாய் விளைந்து
நம் பட்டினி போக்கும்
இது நன்றிக்கடனின் வடிவம்

கோடரி கொண்டு நாம்
மரத்தின் கிளை வெட்டும் போதும்
நம்மீது பூ தூவி வாழ்த்தும்
இது எதிரியையும் மன்னிக்கும் வடிவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகலவன் மாலையில் செவ்வாடை தரித்து
தன் பணி விலகும் வேளை
அதன் ஒளி வாங்கி இருள்நீக்கும் நிலவு
இது பலனெதிர்பாரா கடமையின் வடிவம்

கடப்பாரை கொண்டு
பூமியை நாம் புண்ணாக்கும் போதும்
தவித்த நம் நா நனைக்க
நீர் ஊற்றிப் போகும்
இது கறைபடியா கருணையின் வடிவம்

கரும்பாறை தேடி நாம்
உளி கொண்டு செதுக்க
வலி தாங்கி நற்சிலையாகி நிற்கும்
இது வலிதாங்கும் பொறுமையின் வடிவம்

மண்ணில் வீழ்ந்த விதை
புதையுண்டு போனாலும்
முளைகொண்டு வளரும் விருட்சமாய்
இது வீழ்ச்சியிலும் வெற்றியின் வடிவம்


ஒருநாள் வாழ்கின்ற மலரும்
வண்டுகள் வயிறாறப் பருகிட
தேன் தந்தபின் வாடும்
இது வாழ்நாளின் சேவையின் வடிவம்

இயற்கையின் மனித குணம்
இறைவனின் தயாள குணம்
இயற்கையை இயல்பாக வாழவிடு
வாழ்வின் வெறுமையை போக்கிவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீழ்ச்சியும் எழுச்சியும்



விதையின் வீழ்ச்சி
இன்னொரு மரமாகிறது

அருவியின் வீழ்ச்சி
அழகிய நதியாகிறது
மழையின் வீழ்ச்சி
புவியின் பசுமையாகிறது

காவோலையின் வீழ்ச்சி
குடிசைக்கு கூரையாகிறது

சூரியக்கதிரின் வீழ்ச்சி
இருள்விலகி விடியலாகிறது

மூங்கிலின் வீழ்ச்சி
இசைமீட்டும் புல்லாங்குழலாகிறது

அப்பிளின் வீழ்ச்சி
நியூட்டனின் விதியாகியது

உனது வீழ்ச்சியை
விதியென்று எண்ணாதே

பந்து விழுகின்ற விசையில்தான்
மீண்டும் மேலே எழுகின்றது

கீழே விழும்பொழுதுதான்
எழுகின்ற எண்ணம் தோன்றுகிறது

எத்தனை முறை விழுந்தோம்
என்பது சோதனையல்ல

எத்தனை முறை எழுந்தோம்
என்பதே சாதனை.

(சுடர் ஒளி - 14 - 20 . 01 . 2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## [க]விதை



கற்பனைகள் கருவுற்றுப்பிரசவிக்கும்
கருவறை கவிதை

சிந்தனைகளின் சிகரத்தில்
சிற்பமாய் நிற்பது கவிதை

கலைந்திட்ட கனவுகளையும் திரையிட்ட
திரைக்கூடம் கவிதை

துன்பங்களை அப்பப்போ வடிகட்டும்
வடிகால் கவிதை

துயரங்களையும் துடைத்தெறியும்
துடைப்பான் கவிதை

ஆணிவேர்முதல் ஆகாயம்வரை
ஆராயவைத்தது கவிதை

பூக்களையும் புழுக்களையும்
ரசிக்க வைத்தது கவிதை

ஏக்கங்களையும் எட்டாதஉயரத்தில்
ஏற்றிவைத்த ஏணி கவிதை

இயற்கையையும் இதயங்களையும்
இணைக்கும் பாலம் கவிதை

நெல்சன் மண்டேலா தன் கையிலெடுத்த
முதல் அகிம்சை ஆயுதம் கவிதை

பாரதியின் பெண் விடுதலை, சாதி ஒற்றுமையை
பாரினில் விதைத்த விதை கவிதை.

(உதயன் - 31 . 05 . 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமை மீறினால்...

பூக்களைத் தாலாட்டும் தென்றலும்
ஒருநாள் புயலாகமாறும்
ஆலமரத்தையும் அடியோடு சாய்க்கும்

கரைதொட்டு விளையாடும் அலையும்
ஒருநாள் கரைமேவிப் பாயும்
கடலாண்ட மக்களையும் காவுகொள்ளும்

பொறுமையாய் நமைத் தாங்கும் பூமியும்
ஒருநாள் அதிர்ந்து அடங்கும்
அடுக்குமாடியும் தரைமட்டமாகும்



புல் நனைத்த மழையும்
ஒருநாள் தரைபுரண்டு ஓடும்
வானுயர் மரங்களும் வேரறுந்து வீழும்

வயலுக்கு நீர் பாய்ச்சும் குளமும்
ஒருநாள் அணை உடைத்து ஓடும்
அறுவடைப் பயிரும் அழிந்தங்குபோகும்

நாணிநெளிந்தோடும் நதியும்
ஒருநாள் பெருக்கெடுத்து ஓடும்
தாழ் நிலம் நீரில் மூழ்கிப் போகும்

பொறுமையாய் இருக்கும்வரைதான்
இவை ஆக்கிடும் சக்திகள்
எல்லைமீறினால் பாரை
அழித்திடும் பாரிய சக்திகள்


(உதயன் - 2014)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தம் கேள

உன் இதயத்தின்
துடிப்பைக் கேள்
அதன் துடிப்பு நின்றுவிட்டால்
உன் துடிப்பு நின்றுவிடும்
உன் உயிர்
உன்னிடமில்லை
அதற்க்குள்
இத்தனை அதிகாரம் ஏன்?



மலர்கள் விரியும்
சத்தம் கேள்
ஒருநாள் வாழ்விலும்
தேன் சொட்டி
மணம் வீசும்
மகிமை சொல்லும்
நூறாண்டு வாழும் நீ
சோகத்தில்
மூழ்குவது ஏன்?

பறவை சிறகுலர்த்தும்
சத்தம் கேள்
இறக்கையில் கனம்
இருந்தால்
உயரப் பறப்பது கடினம்
தலைக்கனம் உனக்கிருந்தால்
நீ உயர்ந்து
செல்வது எப்படி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழலைகள் மகிழும் சத்தம் கேள்
நாளைய கவலை அங்கில்லை
வஞ்சனை உள்ளம் அவர்க்கில்லை
நாளைக்காய் பொருள் சேர்த்து
இன்றை நீ இழப்பது ஏன்?

சருகுகள் உதிரும்
சத்தம் கேள்
தனைத் தாங்கிய மரத்தடியில்
உரமாகி வீழ்ந்து மகிழும்
சுயநலம் கொண்டு நீ வாழ்ந்து
மரணத்துக்கு அஞ்சுவது ஏன் ?

அருவிகள் விழுகின்ற
சத்தம் கேள்
வீழ்ந்தாலும் விழுந்த இடத்தை
பசுமையாக்கும் பண்பு அதற்குண்டு
நீ விழுந்த இடத்திலேயே
மற்றவனை விழுத்த
நினைப்பது ஏன்?

நடுநிசியின் நிசப்தம் கேள்
கண்மூடி ஊர் உறங்க
விண்மீன்கள் காவல் காக்கும்
கருவறையும் கல்லறையும்
இதே நிசப்பதம்
இடையில் ஏன்வீண் இரைச்சல்?

(சுடர்ஒளி - 2013)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிலிர்ப்பு ...



பனித்துளியால் புல்நுனி
நனைகையில்
புல்வெளி சிலிர்க்கிறது
தேன்துளியால் இதழ்கள்
நனைகையில்
மலர்கள் சிலிர்க்கின்றன
மழைநீரால் இலைகள்
நனைகையில்
மரங்கள் சிலிர்க்கின்றன
அதுபோலிங்கே
கண்ணீர்த்துளியால் நம்
கன்னங்கள் நனைகையிலே
சிலர் மனங்கள் சிலிர்க்கிறது.



(வலம்புரி - 2011)


## அறுவடை

புன்னகையால் பூரித்த மனதைவிட
கண்ணீரால் நனைந்து புண்பட்டு
பதப்பட்ட மனதில் புதிதாய்
நல்ல சிந்தனையை விதை
அது நல்ல அறுவடையைத் தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆணிவேர்...



எனது துளிர்ப்பே
மரத்தின் பசுமை என்றது
சலசலத்த இலை

எனது மலர்வே
மரத்தின் அழகு என்றது
மணம்வீசும் மலர்

எனது சுவையே
மரத்தின் மகிமை என்றது
சுவையூட்டும் கனி

எனது பரவல்
மரத்தின் பருமன் என்றது
நிழல் பரப்பும் கிளை

எனது தியாகமே
உங்களின் எழுச்சி என்றது
ஒரு குரல்

தலைகுனிந்து பார்த்தன
இலையோடு கனிகொண்ட
கிளைகள்

மண்ணில் புதையுண்டு
ஆழமாய் அமைதியாய் நின்றது
குரல் கொடுத்த ஆணிவேர்.


இதுபோலன்றோ நம்மிடையே
வேர்களாய் தியாகிகளாய்
வெளியுலகில் அறியப்படாத
உத்தமர் சிலரின்
வெளித்தோன்றல்களாய் ஆர்ப்பரிப்பர்.

ஆணிவேரை அறிகையில்
அவை அனைத்தும் அடங்கிவிடும்
உலகம் நிஜத்தை உணர்ந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புயல்



பொறுத்திருக்கும்வரை காற்று
புல்லாங்குழலில் மெல்லிசையை
மெதுவாக மீட்டட்டும்
பொறுமை மீறினால் புயலாய்
புறப்பட்டு மூங்கில் காட்டை
வேரோடு சாய்க்கட்டும்.


## ஏமாளி

ஏமாற்றியவன் பெருமைகொள்கிறான்
ஒருவனை முட்டாளாக்கியதை எண்ணி
ஏமாற்றப்பட்டவன் மகிழ்ச்சிகொள்கிறான்
ஒரு நம்பிக்கைத்துரோகியை
அடையாளம் கண்டுகொண்டதை எண்ணி

## வாழ்க்கை



வாழ்ந்து முடித்தவன்
வாழ்க்கையை சலிக்கிறான்
வாழ்ந்துகொண்டிருப்பவன்
வாழ்க்கையை சகிக்கிறான்
வாழப் போகிறவன்
வாழ்க்கையை சபிக்கிறான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகள் மலிந்தது அறிக்கை நலிந்தது



ஆயிரம் அறிக்கைகள்
அரங்கேறும் நேரம்
கன்னத்தின் ஓரம்
கண்ணீரின் ஈரம்
நீதியும் தீர்ப்பும்
எங்கோவெகு தூரம்
சாட்சிகள் கூடி
ஆதாரம் தேடி
வெளியான குற்றங்கள்
ஒரு கோடி
குற்றத்தைக் குறைக்க
கும்பிட்டு வலிந்தது
ஒரு கூட்டம்
எமது வலிகள்
உலகசந்தையில் மலிந்தது
அறிக்கையின் பக்கங்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல நலிந்தது
வழமையைப் போல
நூறுநாள் ஓடும்
புதிய படமிது
ஆவலோடு நாம்
காத்திருக்க
ஆதாரக் காட்சியும்
தணிக்கைக் குழுவால்
தணிக்கும் இடமிது
பலமுறை நமக்கு
சிறந்த பாடமிது
ஆணைக்குழுக்கள்
ஆயிரம் பிறக்கும்
சாட்சிகள் மெல்ல
வாய் திறக்கும்
அடுத்த நொடியே
ஆணை பறக்கும்
அத்தனையையும்
ஆணைக்குழு மறக்கும்
புதுப்புதுப் பொறிமுறைகள்
அறிக்கையில் வந்தாச்சு
எதிரிக்கு எதிரி
புதிய நட்பாச்சு
அள்ளித்தெளித்த வாக்குறுதி
இப்போ என்னாச்சு?
மண்ணோடு மண்ணாச்சு
காற்றோடு போயாச்சு
நமக்கு கிடைக்கவிருப்பதோ
இலவம் பஞ்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைம்பெண்



செந்நிலவிட்ட புருவம்
நிலவிழந்த வானமாய்
இழையோடிக் கிடக்கிறது சோகம்
அக்கினியை சாட்சிவைத்த சாதிசனம்
இன்று அக்கினியில் தள்ளிவிடுகிறது

தாரமாய் தாயாய் இசைமீட்ட இல்லறம்
தந்தியறுந்த வீணையாய் இசைமறந்து
வீணாகிப்போகிறது

எஜமானியாய் வீட்டை ஆண்டபெண்மை
எழுத்தில்லா ஏட்டைப்போல்
வெள்ளுடைதரித்து முடங்குகிறது மூலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைப்பாற மடிகொடுத்த இல்லாள்
இலையுதிர்ந்த பட்டமரமாய்
பரிதவிக்கிறாள் இளைப்பாற நிழலின்றி
ஓடி ஆடி வேலைசெய்து
ஓய்ந்துபோய் இருக்கையிலே
ஓடிவந்துசொல்வர் நாவிழந்தோர்
"நல்லகாரியம் நடக்கையிலே
அமங்கலி நீ முன்னுக்கு நின்றிராதே"

துணையிழந்து துடிதுடித்து
தன் பிள்ளைகளை கரைசேர்க்க
துணிவோடு தோற்பையை தோளிலிட்டு
பொடிநடையாய் வேலைக்குச் சென்றால்
கணவனை இழந்து சிலநாட்கள் ஆகலையே
தெருவினிலே திரியுதென்பர்

கணவர் இருக்கையிலே
உதவி கேட்டு வந்த உறவுகள்
தனித்து அவளிருக்கையிலே தந்திரமாய்
ஆயிரம் கட்டுக்கதைகள் சொல்வர்
ஆடவரை கண்டாலும் கதைத்தாலும் குற்றம்
என்ன செய்தாலும் அது குற்றம்

புரிந்துகொள்ளா நியாயமற்ற
கலாசாரம் பண்பாடு மூடநம்பிக்கையின்பால்
முடங்கிவிடுகிறது மீதி வாழ்க்கையை

பாரதிகண்ட புதுப்பெண்கள் வாழ்ந்த
புனிதமண்ணில் இன்னும் வேரூன்றி நிற்கிறது
மூடநம்பிக்கைகளும் எழுதாத சட்டங்களும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காலத்தை பதிவாக்கும் கவிஞன் அஜந்தன்

இலக்கிய உலகில் தடம்பதிக்கும் புதிய வரவாக யாழ் கந்தர்மடம் அஜந்தன் அவர்களின் "மனமெனும் கூடு" கவிதை தொகுப்பு நூல் தன் கனத்த இதயத்தின் காட்சிப் புலத்தை கவிதை வடிவில் உங்கள் கரத்தில் கவிதை நூலாக தந்து மகிழ்கின்றார்.

சமூக அவலங்கள், அலங்கோலங்கள், அதிகாரத்தனங்களைக் கண்டு மனம் கொதிக்கும் கவிஞனின் வேகம் பல வடிவங்களில் படைப்புக்களாக தரும் அஜந்தன் காலத்தின் பதிவாக சஞ்சிகைகளில், பத்திரிகைகளில் ஒரு நல்ல கவிஞனாக கதை ஆசிரியராக, கட்டுரையாளராக உளவியல், சமூகவியல், ஆன்மீக பார்வையில் மனம் எனும் கூட்டுக்குள் அடைபட்ட சிந்தனைகளை படைப்பாற்றல், இலக்கிய செழுமை திறன், மனித நேய பண்புடன் வாசகரோடு பகிர்ந்து கொள்ளும் நூலாசிரியர் அஜந்தன் சமூக அவலங்களைக் கண்டு குமுறும் சிறந்த படைப்பாளி.

அஜந்தனின் படைப்பாற்றலுக்கு துணையாகும் அவரது உளவியல் தேடல், சிறந்த ஆற்றுப்படுத்துனராக சிறந்த வளவாளராக, மீள் குடியேறும் மக்களுடன் சிறுவர், முதியோர், ஆசிரியர்கள் என பலருடன் அருகிருந்து பணியாற்றிய அனுபவங்களின் மனப்பதிவுகளுக்கே மனம் எனும் கூடு இலக்கிய படைப்பில் பதிவாகிறது.

மக்களின் தொடர்பாடலும் படைப்புலக தேடலும் பகிரும் வல்லமையும் எமது மக்களிடம் அருகிவரும் காலத்தில் சகல வல்லமையும் ஆற்றலும் ஆளுமையுள்ள நூலாசிரியர் அஜந்தன் கவிஞனின் இலக்கியப்பதிவு எம் மண்ணுக்கும் மக்களுக்கும் நம்பிக்கையூட்டும் நல்வரவாக எண்ணி உளமார வாழ்த்துகின்றேன்.

செ.யோசப்பாலா
உளச்சமூக சீராளன்
10/2 மத்தியூஸ் வீதி
யாழ்ப்பாணம்.

ISBN 978-955-43107-0-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org